வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 16.10.2023 திங்கட்கிழமை | இதழ் : 310 | பக்கங்கள் : 16

### மயிலத்தமடு விவகாரம்:

# விவசாயம் செய்வோருக்கு மாற்று இடம் வழங்குங்கள்!

## ஜனாதிபதி ரணில் அதிகாரிகளுக்கு பணிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 16**

**வெளி மாவட்டங்களில் இருந்து வந்து மயிலத்தமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே விவசாயம் செய்ய மாற்று இடஒதுக்கீடுகள் வழங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது**



மட்டக்களப்பு - மயிலத்தமடு - மாதவணை கால்நடை பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரை காணிகளில் வெளி மாவட்டங்களில் இருந்து வந்த பெரும்பான்மையினர் ஆக்கிரமித்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டினர். பெரும்பான்மையினரின் அச்சுறுத்தல் மற்றும் அடாவடி செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி பணிமனையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இதில், "விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு என்பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும். இவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்து வந்து மயிலத்தமடுவில் விவசாயம் மேற் கொள்பவர்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே விவசாயம் 11

## தமிழ் கட்சிகளின் தலைவர்கள் யாழில் நேற்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 20ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று மாலை பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின்போது, ஹர்த்தால் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள், கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புகளைச் சந்தித்தல் மற்றும் இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்புதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற 11

## நாகபட்டினம் - காங்கேசன் கப்பல் சேவை 3 நாட்களே!

### கப்பல் பயணம் நேற்று இரத்து

சென்னை, ஒக். 16

நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையே 40 ஆண்டுகளுக்குப் பிறகு பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை தொடங்கியது. இந்த நிலையில், நேற்றைய தினம் நடைபெறவிருந்த கப்பல் சேவை இரத்தானது.

இந்த நிலையில், வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே நாகபட்டனம் - காங்கேசன்துறை கப்பல் சேவை நடத்தப்படும் என்று கப்பல் சேவையை முன்னெடுக்கும் கே. பி. வி. ஷாய்க் மொஹமட் ராவுத்தர் நிறுவனம் அறிவித்துள்ளது. 11

## இலங்கையில் எந்தவோர் இடமும் தமிழருக்கு சொந்தமில்லையாம்!

### உதய கம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, ஒக். 16

"இலங்கையில் எந்தவோர் இடமும் தமிழர்களுக்கு சொந்தம் அல்ல. ஆனால், நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்கள் அனுமதியளித்துள்ளார்கள். இதனை சர்வதேச சமூகம் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்."

- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இலங்கையில் இனப்பிரச்னை என்று ஒன்றும் இல்லை. இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள்தான் அரசியல் பிழைப்புக்காக இனப்பிரச்னை 11

## இந்திய படைகளால் தமிழர் கொல்லப்பட்ட நாளில் இசை நிகழ்ச்சியை நடத்தாதீர்கள்!

### இந்திய இசையமைப்பாளர் சந்தோஷுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம்!

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்திய படைகள் நடத்திய படுகொலை நினைவுநாளான ஒக்ரோபர் 21, 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி நடத்துவதை தவிர்க்க வேண்டும் என்று கோரி இந்திய திரைப்பட இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் இந்த கோரிக்கையை முன்வைத் துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்-

தாங்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 21,22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள தாக அறிய முடிகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை வெளிக்கொணரும் தங்களின் இசையமைப்பில் உருவான பாடல்களையும், இசையையும் ஈழத் தமிழ் மக்களான நாங்களும் கேட்டு, இரசித்து மகிழ்கிறோம். அந்த வகையில் உங்களுக்கு ஏராளமான இரசிகர்கள் எம்மத்தியில் இருக்கின்றார்கள்.

பெரும் இன வழிப்பை தமிழினம் சந்தித்ததை நீங்கள் 11

## சந்தைகளில் 10 சதவீத கழிவு முறையை உடன் நிறுத்துங்கள்

### மீறுவோரை கைது செய்யுங்கள் பொலிஸாருக்கு அமைச்சர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சந்தைகளில் நடைமுறையிலுள்ள 10 சதவீத கழிவு அறவிடும் நடைமுறையை உடனடியாக நிறுத்தி, இந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை உடன் கைதுசெய்ய வேண்டும் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட விவசாய குழு கூட்டத்திலேயே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலி, மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து 11

## 45 நாட்களில் பெறுபேறுகள்!

கொழும்பு, ஒக். 16

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் 45 நாட்களில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை நேற்று 11

## இந்தியப் பிரதமருக்கு கடிதம் 7 கட்சிகள் புதனன்று அனுப்பும்!

யாழ்ப்பாணம், ஒக். 16

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிர்வரும் புதன்கிழமை 7 தமிழ்க் கட்சிகள் இணைந்து கடிதம் அனுப்பவுள்ளன என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருக்குத் தமிழ்க் கட்சிகளால் அனுப்பப்படவுள்ள கடிதம் தொடர்பாக நேற்று அவரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "இந்திய பிரதமருக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

தெற்கிலிருந்து முற்போக்கு சிந்தனையுள்ள சில சிங்கள நண்பர்கள் கடந்த இரண்டு நாட்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு அரசியல் தரப்பினரையும் சந்தித்திருந்தனர். வந்திருந்தவர்களில் சிலர் இந்த ஊர்க்குருவியின் நண்பர்கள் என்பதால் அவர்களை, அவர்கள் தங்கியிருந்த இடத்துக்கு சென்று சந்தித்திருந்தோம்.

அவர்கள் யாழ்ப்பாணம் வந்த தன் நோக்கம், மாகாண சபையை வினைத்திறனுடன் இயங்கச் செய்யவேண்டும் என்பதுதான். அதனை செய்வதற்காக பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றக்கூடிய சில முன் யோசனைகளை தயாரித்து வைத்திருக்கும் அவர்கள் அந்த யோசனைக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் முக்கியமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெறவேண்டும் என்பது மாத்திரமல்ல அவர்கள் ஊடாகவே இந்த திருத்தங்களை முன்நகர்த்த வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோளாக இருந்ததை அறிய முடிந்தது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் மாகாண சபைகள் தற்போது நிர்வகிக்கப்படாவிட்டாலும் அவை தற்போதும் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

அவற்றை இன்னும் வினைத்திறனுடன் நடத்துவதற்கு எந்த வகையான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பது பற்றியும் உதாரணமாக ஆளுநரிடமிருக்கும் பல அதிகாரங்களை இல்லாமல் செய்து அதனை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிப்பது உட்பட பல யோசனைகளை அவர்கள் கொண்டிருப்பதை அறியமுடிந்தது.

யாழ்ப்பாணம் வரும் வழியிலேயே கிளிநொச்சியில் சில சந்திப்புகளை நடத்தி விட்டே அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். நாங்கள் அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் யாழ்ப்பாணத்தில் தமது சந்திப்புகளை தொடங்கியிருக்கவில்லை. ஆனாலும் கிளிநொச்சி சந்திப்பு அவர்களை உற்சாகப்படுத்தியிருந்ததை மாத்திரம் அவதானிக்க முடிந்தது.

அவர்களின் அந்த முயற்சியில் அவதானிக்க முடிந்த மிக முக்கியமான விடயம், அவர்கள் பதின்மூன்று என்ற வாக்கியத்தை எந்தக் கட்டத்திலும் உபயோகிக்கவில்லை என்பதுதான். அவர்கள் மாகாண சபைகளை எப்படி வினைத்திறனுடன் கொண்டு செல்வது என்பது பற்றியே பேசினார்கள்.

அப்படி அவர்கள் பேசிய போதுதான் அண்மையில் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்திருந்த ஊடகவியலாளரும் நண்பருமான 'புதினம்' கரன் அவர்கள் விடுத்த வேண்டுகோள் ஒன்று நினைவுக்கு வந்தது.

'நமது ஊடகங்கள் எல்லாம், பதின்மூன்றாவது திருத்தம் என்றுதான் எப்போதும் எழுதுகிறார்கள். ஆனால், இன்றுள்ள பல இளைஞர்களுக்கு பதின்மூன்று என்றாலே என்னவென்று தெரிவதில்லை. அதுபற்றி இளைய தலைமுறையினருக்கு விளக்கவேண்டியது அவசியம்' என்ற அவரது கோரிக்கை நியாயமானதுதான்.

பதின்மூன்றை தொட்டும் பார்க்க மாட்டோம் என்று சொல்கின்றவர்கள்கூட, மாகாண சபைகளை தொட்டும் பார்க்க மாட்டோம் என்று கூறுவதில்லை. அதிகம் என், பதின்மூன்றை மூர்க்கத்தனமாக எதிர்க்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிகூட, எதிர்காலத்தில் மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடைபெற்றால் போட்டியிடாமல் விடப்போவதில்லை. அதனால்தான் அவர்கள் பதின்மூன்றுக்கு எதிராக ஊர்வலம் போனார்களே தவிர, மக்களுக்கு புரியக்கூடியவாறு மாகாண சபைகள் வேண்டாம் என்று அதற்கு எதிராக ஊர்வலம் போகவில்லை.

அதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது. தெற்கிலிருந்த வந்திருந்த நண்பர்களுடனான நீண்ட உரையடலில் எமது பேச்சு தமிழகம் பற்றி திரும்பிய போது, வந்திருந்த தெற்கு நண்பர் ஒருவர், தமிழகத்தின் வளர்ச்சி பற்றி சிலாகித்து பேசத்தொடங்கியபோது, அங்கிருந்த மற்றுமொரு நண்பர், அவரை இடைமறித்து சொன்னதுதான் நான் இன்று சொல்ல வருகின்ற முக்கிய செய்தி.

'ஆயிரத்து தொழாயிரத்து நாற்பத்து ஒன்பதில் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் எதிலும் பங்கேற்றகவில்லை. அது, தமிழகம், ஆந்திரா, கேரளா, கர்நாடகம் என்று திராவிட மொழிவழி மாநிலங்களை உள்ளடக்கிய, தன்னாட்சி உரிமை பெற்ற, 'திராவிட நாடு' என்ற கோரிக்கையுடனேயே இருந்தது. பின்னர் 'மெட்ராஸ்' மாகாணம் என்ற மாகாணத்தை தமிழகம் என்று பெயர் மாற்றிக்கொண்டு, மாநில அரசை ஏற்றுக்கொண்டது. அவ்வாறு மாநில ஆட்சியை ஏற்றுக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைக் கைப்பற்றியதுடன், தொடர்ந்து மாநிலக் கட்சிகளே தமிழகத்தை ஆளக்கூடியதாக இருந்ததுடன், இன்று அதன் வளர்ச்சி அபரிமிதமாக மாறியிருக்கின்றது. தனிநாடு என்ற கொள்கையில் அப்போதைய திராவிட முன்னேற்றக் கழக தலைவர் அண்ணாத்துரை விடாப்பிடியாக இருந்திருந்தால், இன்றைய நிலைமை எப்படியிருக்கும் என்பது சொல்ல முடியாதது. ஆனால், அவர் அதனை ஏற்றுக்கொண்டு கிடைப்பதை வைத்துக்கொண்டு தமிழகத்தின் ஆட்சியை பிடித்ததால், இன்று முழு இந்தியாவுக்கும் முன்மாதிரியான மாநிலமாக தமிழகம் உயர்ந்திருக்கின்றது.'

அந்த நண்பர் சொன்ன போது, என் மனதில் ஓடியது, நமக்கும் இப்போது தேவை ஒரு அண்ணாத்துரைதான்!.

**-ஊர்க்குருவி.**

## யாழ். பேருந்து நிலையத்தில் பிறந்தநாள் கொண்டாடிய இருவருக்கு விளக்கமறியல்

### ஏனையோரை கைது செய்ய நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத் துக்குள் அனுமதியின்றி ஒன்றுகூடி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த பிறந்தநாள் நிகழ்வில் பங்கேற்ற ஏனையவர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், முழவை சந்தியை சேர்ந்த இளைஞர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். இரு நாட்களுக்கு முன்னர், இளைஞர் ஒருவரின் 33ஆவது பிறந்தநாள் நிகழ்வு, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் கொண்டாடப்பட்டது.. அந்த பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபடும் இளைஞர்கள் பலரும் அதில் பங்கேற்றுள்ளனர்.

மத்திய பேருந்து நிலையத்துக்குள் நுழைந்த இந்த கும்பல் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு இடையூறாக இருப்பதாக குறிப்பிட்டு பேருந்துகளையும் அப்புறப்படுத்துமாறு மிரட்டியுள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாட்டம் தொடர்பான காணொலிகள் ரிக்ரொக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வைரலானது. பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் விதமாக ஒன்றுகூடியமை, சட்டவிரேதமாக கூட்டம் கூடியமை ஆகிய குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் இருவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பங்கேற்ற ஏனையவர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் தினமும் சட்டவிரோத ஒன்றுகூடல் நடப்பதாக சுட்டிக்காட்டிய நீதிவான் பொலிஸார் தமது கடமையை செய்வதில்லையென்றும் கண்டித்தார். (ஐ)

## நடுத்தர, உயர்தர வகுப்பினருக்கான 9 வீட்டு திட்ட பணிகள் மீள ஆரம்பம்!

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 16

நடுத்தர மற்றும் உயர் நடுத்தர வகுப்பினருக்கான 9 வீட்டுத் திட்டங்களின் கட்டுமான பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வீடமைப்பு திட்டங்கள் மாகும்புர, மாலபே, பொரலஸ்கமுவ, ஸ்டேடியம்கம, ஒருகொடவத்தை கட்டம் 1 மற்றும் 2, பேலியகொடை கட்டம் 1 மற்றும் 2, அநுராதபுரம் ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த 9 வீட்டுத் திட்டங்களும் 2,918 வீடுகளை கொண்டவை. இந்த வீட்டு திட்டங்களின் கட்டுமான பணிகள் 2021இல் தொடங்கப்பட்டன. ஆனால், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பிற காரணங்களால் கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டன.

இதனையடுத்து, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் இணைந்து இந்த வீட்டுத் திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துகின்றன.

இதில், இரண்டு படுக்கையறைகள் கொண்ட ஒரு வீடு 700 சதுர அடிகளைக் கொண்டது. மூன்று படுக்கையறைகள் கொண்ட வீட்டின் அளவு 900 சதுர அடிகளாகும். நடுத்தர வர்க்கத்தினரின் வருமான நிலைக்கு ஏற்றவாறு இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதன்படி, நடுத்தர வருமானம் பெறும் பிரிவினர் வீட்டு வசதிக்கான தடைகளை நீக்கி, பணியிடங்களை எளிதில் சென்றடைய முடியும் என்றும், நடுத்தர வருமானம் பெறும் பிரிவினர் நகர்ப்புறங்களில் குடியேற முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

நகர அபிவிருத்தி அதிகார சபை இந்த வீட்டுத் திட்டங்களை முன்விற்பனை அடிப்படையில் நிர்மாணித்து வருகிறது. வீடுகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான வங்கி வசதிகளும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் செய்யப்படுகின்றன.

இதன்படி, மாலபே, மாகும்புர, பொரலஸ்கமுவ மற்றும் ஒருகொடவத்தை வீடமைப்புத் திட்டங்களில் பல வீடுகளுக்கு ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டுள்ளதாக அதிகார சபை தெரிவித்தது. (ஐ)

*சனல் 4 குற்றச்சாட்டு:*

## பாராளுமன்ற குழுவை நியமிக்கும் பிரேரணை இவ்வாரம் பாராளுமன்றில்

கொழும்பு, ஒக். 16

சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ஆவணப்படத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில், விசாரணை செய்வதற்கான பாராளுமன்ற விசேட குழுவை நியமிப்பதற்கான பிரேரணை இந்த வாரம் பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் 17 ஆம் திகதி குறித்த பிரேரணை பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ஐ)

## பொன். செல்வராசாவின் பூதவுடல் தகனமானது!

மட்டக்களப்பு, ஒக். 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான மறைந்த பொன்.செல்வராசாவின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

இறுதிக் கிரியைகளில் அரசியல்வாதிகள் பலரும் பங்கேற்றனர். மட்டக்களப்பிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று, பூதவுடல் கள்ளியங்காடு தகனசாலையில் தகனம் செய்யப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான பொன். செல்வராசா நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் தனது 77 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
16.10.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகளின் அறவழிப் போராட்டம்?

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இயங்கும் ஏழு கட்சிகள் இணைந்து எதிர்வரும் 20ஆம் திகதி, கடையடைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன. இது தேவையானதா - இதனால் அரசாங்கத்துக்கு நெருக்கடிகளை வழங்க முடியுமா - இப்படியான கேள்விகளைக் காண முடிகின்றது. யுத்தம் நிறைவுற்று பதினான்கு வருடங்கள் கடந்துவிட்டன. இந்தக் காலத்தில் இவ்வாறான பல போராட்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் இவ்வாறான கேள்விகள் தவறானவையல்ல - ஆனால், இதைத் தவிர தமிழ் கட்சிகளால் எதைச் செய்து விட முடியுமென்னும் கேள்வியிலிருந்துதான் விடயங்கள் நோக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய கட்சிகள் தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்தும் ஓர் உத்தியாகவே இவ்வாறான அறிவிப்புக்களை மேற்கொள்கின்றன ஆனால், இவைகள் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்துகின்றனவா - என்னும் கேள்வியிலிருந்துதான் விடயங்களை நோக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் அறவழி போராட்டங்களால் இலங்கை அரசை இறங்கிவரச் செய்ய முடியவில்லை - முடியதென்னும் அனுபவத்திலிருந்துதான் தமிழ் ஆயுதப் போராட்டம் உயிர் பெற்றது. பல்வேறு இயங்கங்களாக வெளிக்கிளம்பிய ஆயுதப் போராட்டம் - பின்னர், விடுதலைப் புலிகள் தலைமையில் ஒரு மரபுவழி இராணுவமாக வளர்ச்சியுற்றது. இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால், அறவழிப் போராட்டம் ஏற்கனவே தோல்வியுற்ற ஒன்று. எனவே, மீண்டும் அவ்வாறான வடிவங்களில் இலங்கை அரசை இறங்கிவரச் செய்யலாமென்று எண்ணுவதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?

தமிழ் மக்களின் எதிர்ப்பை காண்பிப்பதற்கு வேறு எதை செய்வதென்று கட்சிகள் கேட்கக்கூடும். தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை - நீதிக்கான கோரிக்கைகளை முன்வைப்பதற்கான எதிர்ப்புகளை காண்பிப்பதில் தவறில்லை. ஆனால், அதற்காக ஒரேயொரு வடிவத்தில் சரணாகதியடைவதுதான் பிரச்னையானது. மாற்று வழிகளில் என்ன செய்யலாமென்று சிந்திக்க வேண்டும். தொழில் சங்கங்கள், விவசாய அமைப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் வகையில் எவ்வாறான எதிர்ப்புகளை காண்பிக்க முடியுமென்று சிந்திக்க வேண்டும். இளையவர்களின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கான வழிகளை ஆராய வேண்டும். தொடர்ந்தும் கட்சிகளின் தலைவர்களும் ஆதரவாளர்களும் மட்டுமே கூடிக் கலைவதை போராட்டமென்று கூறிக் கொண்டிருப்பது சரியானதல்ல. அது பலவீனத்தின் வெளிப்பாடு.

அறிக்கை விடுவதற்கு இலகுவான விடயங்களோடு மட்டுமே தமிழ்த் தேசிய கட்சிகள் திருப்திப்பட்டுக் கொள்கின்றன. இது பிரச்னையானது. மற்றும்படி, கடையடைப்புக்கான அழைப்புக்கு வடக்கு மாகாணத்தில் ஆதரவு கிடைகின்றது. ஆனால், கிழக்கு மாகாணத்தில் இது பெரிதாக பொருட்படுத்தப்படுவதில்லை - இதற்கு கிழக்கு மாகாணத்தின் வாழ்நிலையும் பிரதான காரணமாகும். மூவினங்களும் வாழும் பகுதியென்பதால் வர்த்தக அமைப்புகளின் ஆதரவை முழுமையாக பெறுவதில் சிக்கல்களுண்டு. இரண்டவாது இவ்வாறான கடையடைப்பு தொடர்பில் சாதாரண தமிழ் மக்கள் மத்தியில் உணர்வுபூர்வமான ஈடுபாடு இருப்பதாகவும் கூறமுடியாது. கடைகள் பூட்டப்பட்டிருக்கின்றன - எனவே, வெளியில் செல்வதற்கு அவசியமல்லை, என்னும் அடிப்படையில்தான் ஹர்த்தால் என்னும் சொல்லை சாதாரண மக்கள் கடந்து செல்கின்றனர். ஒருவேளை வர்த்தக நிறுவனங்கள் கடையடைப்புக்கு இணங்கவில்லையாயின் ஹர்த்தால் பிசுபிசுபித்துப் போய்விடும்.

யுத்தம் நிறைவுற்று பதினான்கு வருடங்கள் சென்றுவிட்ட பின்னரும்கூட, மக்களை அணிதிரட்ட முடியாத நிலையிலேயே தமிழ் தேசிய கட்சிகள் இருக்கின்றன. ஒரு நம்பிக்கைமிக்க தலைமை இருக்கின்ற போதுதான், மக்கள் அதனை நம்பி வெளியில் வருவார்கள். அப்படித்தான் உலகின் பல பகுதிகளிலும் நடைபெற்றிருக்கின்றது. அறகலய தன்னெழுச்சியானதென்று கூறப்பட்டாலும்கூட, பொருளாதார நெருக்கடியின் மீதான சாதாரணமானவர்களின் கோபம், அந்த கோபத்தை திட்மிட்ட வகையில் பேணிப்பாதுகாக்கும் செயல்பாடுகள் காரணமாகவே அது ஓர் இலக்கை நிறைவுசெய்தது. தமிழ்த் தேசிய கட்சிகள் புதிய ஜனநாயக எழுச்சிக்கான வடிவங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

# விவசாய தரச் சான்றிதழை இலகுவாக பெற உதவுங்கள்

## வடக்கு ஆளுநர் அமைச்சரிடம் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஒக். 16*

வடக்கின் விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் விவசாயிகள் கடும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். எனவே, விவசாயிகள் ஏற்றுமதி தரச் சான்றிதல் பெறுவதை இலகுபடுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் கோரிக்கை விடுத்தார்

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறுகின்ற விவசாய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

யாழ். விவசாயிகள் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்குகின்றனர். முக்கியமாக இந்த ஏற்றுமதிக்கான தரச் சான்றிதழ் பெறுவதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றார்கள்.

கொழும்புக்கு பயணம் மேற்கொண்டு தங்களுடைய தரச் சான்றிதழை பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். எனவே, அதனை இலகுவான முறையில் பெற்றுக் கொள்ள ஆவனசெய்யுமாறு கோரிக்கை விடுத்தார்

அத்தோடு யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் வெளியிடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றது. எனவே, அவ்வாறு விற்பனை செய்யப்படும்போது அந்த பொருட்களுக்கான விலை நிர்ணயத்தையும் கருத்தில் கொள்ளுமாறும் - ஆளுநர் தெரிவித்தார். (ஐ)

# யாழிலிருந்து முல்லை சென்ற இ. போ. ச. பஸ் மீது கல்வீச்சு!

*முல்லைத்தீவு, ஒக். 16*

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தின் மீது நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது.

யாழிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த இ. போ.ச பேருந்தின்மீது புதுக்குடியிருப்பு - மந்துவில் பகுதியில் வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் கல் வீச்சு தாக்குதலை நடத்தி விட்டு மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்தில் இ. போ. ச. பேருந்தின் முன் பகுதி சிறியளவில் சேதமடைந்தது. இந்தத் தாக்குதலை அடுத்து அந்த பேருந்தில் பயணித்த பயணிகளுக்கு மாற்று பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இரு இளைஞர்கள் கைதாகினர்!

*முல்லைத்தீவு, ஒக். 16*

முல்லைத்தீவு - நாவற்காடு பிரதேசத்திலுள்ள கூழா முறிப்பு காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி ஈடுபட்ட இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், விமானப்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கூழா முறிப்பு பகுதியில் பொலிஸாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்ற பகுதி அடையாளம் காணப்பட்டது. இதன்போது, அங்கிருந்த 760 லீற்றர் கசிப்பு மற்றும் கோடா, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கைப்பற்றப்பட்டன. அத்துடன், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 30, 32 வயதுடைய ஆண்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வீட்டுக் காணியிலிருந்து மோட்டார் குண்டு மீட்பு!


*முல்லைத்தீவு, ஒக். 16*

வீட்டுக் காணியிலிருந்து மோட்டார் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண்டாங்குளம் பகுதியிலுள்ள தனது வீட்டுக் காணியை உரிமையாளர் துப்புரவு செய்தபோதே இந்தக் குண்டு கண்டறியப்பட்டது. இது தொடர்பில், அவர் முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நீதிமன்ற அனுமதியோடு விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் காணியில் இருந்த மோட்டார் குண்டை மீட்டு செயலிழக்க செய்தனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒக்ரோபர் - 16 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 29
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துவிதியை




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்த்த வேலைகள் முடியும் நாள்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பார்கள். நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**கடகம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். புதுவேலை கிடைக்கும். வாகன வசதிப் பெருகும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். சாதிக்கும் நாள்.

**மகரம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். புதிய முயற்சியில் வெற்றி கிட்டும் நாள்.

**கும்பம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரம் சூடு பிடிக்கும். தலைமையின் ஆதரவு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

# பெண்களின் வாழ்வில் புரட்சிக்கு அண்ணா, கருணாநிதியே காரணம்!

## சோனியா காந்தி தெரிவிப்பு

**சென்னை, ஒக். 16**
**அண்ணா, கருணாநிதி தலைமையிலான அரசுகளின் திட்டங்கள், பெண்களின் வாழ்க்கையில் பல புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தின என்று கூறியுள்ளார் சோனியா காந்தி.**

**தி. மு. கவின் மகளிர் உரிமை மாநாட்டில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

ராஜீவ் காந்தி வரலாற்று சிறப்புமிக்க 33 சதவீத இடஒதுக்கீட்டை பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் கொண்டு வந்தார். இந்த சட்டத் திருத்தங்கள் சமூகத்தின் அடித்தளத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, பெண்களுக்கு தலைமை பொறுப்புகளை அளித்து, பெரிய சமூக புரட்சிக்கு வித்திட்டன. ராஜீவ் காந்தியின் இந்த சட்டம் தான், இன்று பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 33வீத இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வருவதற்கான அடிப்படையாக அமைந்தது.

மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி இருந்தாலும் கூட, இந்த சட்டம் என்று அமலுக்கு வரும் என்று தெளிவே இல்லாத நிலை உள்ளது. நாளை இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்துதான் இந்த சட்டத்தை நிறைவேற்றி தரும் என்ற சூழல் உள்ளது.

அண்ணா, கருணாநிதி தலைமையிலான அரசுகளின் திட்டங்கள், பெண்களின் வாழ்க்கையில் பல புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தின. அதன் அடிப்படையில்தான் இன்று தமிழ்நாடு, இந்தியாவே புகழும் வகையில் மகளிர் சமத்துவத்துக்கான ஒளி விளக்காகத் திகழ்கிறது.

கருணாநிதி ஆட்சி காலத்தில்தான், காவல்துறையில் பெண்களின் பங்கை அவர்கள் உறுதி செய்தார்கள். இன்று காவல்துறையில் 4இல் ஒரு பங்கு பெண்களாக இருப்பது எவ்வளவு பெருமைப்படக்கூடியது. கருணாநிதி செய்த மற்றொரு சீர்திருத்தம் அரசுப் பணிகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை கொண்டு வந்தது. அதன் விளைவாக அரசுப் பணிகளில் 30 சதவீதம் பெண்களாக இருந்தார்கள். இன்று முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு 40 சதவீதமாக உயர்த்தி பெண்களை பெருமைப்படுத்தி இருக்கிறது என்றார்.

(ஐ)

# சமூகநீதியை எந்த சூழ்நிலையிலும் ‘இந்தியா’ கூட்டணி கைவிடக்கூடாது

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஒக். 16
சமூக நீதியை எந்த சூழ்நிலையிலும் விட்டு கொடுக்கக்கூடாது. இந்தியா கூட்டணி - கொள்கை கூட்டணி. இந்தியா கூட்டணி வெற்றி பெறுவதன் மூலம் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி. மு. கவின் மகளிர் உரிமை மாநாட்டில் உரையாற்றிய அவர்,

இந்தியா கூட்டணியின் மகளிர் தலைமைகள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். பா. ஜ. கவை முற்றிலுமாக வீழ்த்த வேண்டும். ஒரே நாடு ஒரே தேர்தல்



என்ற எண்ணத்தில் பிரதமர் செயல்படுகிறார்.

உண்மையான அக்கறையுடன் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் கொண்டுவரப்படவில்லை. மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை உடனடியாக செயல்படுத்தி இருந்தால் பாராட்டி இருக்கலாம்.

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 2024க்கு பிறகு பா. ஜகவின் ஆட்சி இருக்காது. தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது.

சமூக நீதியை எந்த சூழ்நிலையிலும் விட்டு கொடுக்கக்கூடாது. இந்தியா கூட்டணி கொள்கை கூட்டணி. இந்தியா கூட்டணி வெற்றி பெறுவதன் மூலம் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்படும்.

(ஐ)

# மகளிர் இடஒதுக்கீடுபற்றி பேச தி. மு. கவுக்கு தகுதி இல்லை!

## பா. ஜ. க. தலைவர் சாடல்

சென்னை, ஒக். 16
மகளிர் இட ஒதுக்கீடு குறித்து பேசுவதற்கு தி. மு. கவுக்கு எந்தத் தகுதியும் இல்லை என்று பா. ஜ. க. தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தமிழக பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை மீண்டும் இன்றைய தினம் தனது நடை பயணத்தை தொடங்கவுள்ளார்.

நீலகிரி பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட அவினாசியில் காலையிலும், மேட்டுப்பாளையத்தில் மாலையிலும் நடைபயணம் மேற்கொள்கிறார். இந்த நடைபயணத்தில் மத்திய மந்திரிகள் பியூஸ் கோயல், எல்.முருகன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர், தி.மு.க சார்பில் சென்னையில் மகளிர் உரிமை மாநாடு நடத்தியுள்ளனர். அதில் மகளிர் உரிமை குறித்து பேசியுள்ளனர்.

2 நாட்களுக்கு முன்பு மகளிர் பொலிஸ் நிலையத்திற்குள் நுழைந்து தி.மு.க.வினர் அங்கிருந்த பொலிஸாரை மிரட்டி உள்ளனர். இப்படி பொலிஸாரையே மிரட்டும் தி.மு.க.வினர் மகளிர் இட ஒதுக்கீடு பற்றி பேசுவதற்கு எந்தவித தகுதியும் இல்லை.

பிரதமர் மோடி எந்தவித பின்னணியும் இல்லாமல் மகளிருக்காக இட ஒதுக்கீட்டை கொண்டு வந்துள்ளார். காங்கிரஸ் கட்சியானது தனது கட்சியை வளர்ப்பதை விட தி.மு.க.வை வளர்ப்பதில்தான் அதிக குறிக்கோளாக வைத்து அதற்கு ஏற்பவே செயல்பட்டு வருகிறது.

காங்கிரஸ் கட்சியின் ஈ.வி.கே.ஸ்.இளங்கோவன் தெரிவித்த கருத்தில் இருந்தே தமிழகத்தில் பா.ஜனதா எந்த அளவு வளர்ந்துள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

தமிழகத்தில் கூட்டணி பேச்சை தேசிய தலைவர்கள் தான் மேற்கொள்வார்கள். எனது ஒரே வேலை தமிழகத்தில் பா.ஜ.கவை வளர்ப்பது மட்டுமே எனது குறிக்கோளாக உள்ளது. அதனை நோக்கி நான் பயணித்து கொண்டிருக்கிறேன் - என்றார்.

(ஐ)

# யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் ம. எண்ணெய்!

## விவசாய அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், ஒக். 16

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.**

**இதற்கான ஏற்பாடுகளை அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் ஊடாக முன்னெடுப்பதாக நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த மாவட்ட விவசாயக் குழு கூட்டத்தில் அமைச்சர் உறுதியளித்தார்.**



யாழ். மாவட்டத்தில் கிணறுகளை நம்பிய விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. இதனால், சிறுபோக பயிர் செய்கைக்கு நீர் பம்பிகள் மூலமே நீரிறைக்கப்படுகின்றது. இதற்கு மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில், தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தாலும் கடந்தாண்டு ஏற்பட்ட நெருக்கடி நிலையிலும் எமது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு விரக்திநிலைக்கு சென்றிருந்தார்கள்.

இதுதொடர்பாக தொடர்ச்சியாக கடிதங்கள் மூலம் விவசாய அமைச்சரிடம் அங்கஜன் இராமநாதன் விடுத்த கோரிக்கைக்கு அமைய, யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது. விவசாயிகளுக்கும் மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தினூடாக மேற்கொள்ளவுள்ளதாக நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் அவர் தெரிவித்தார். (ஐ)



# அப்துல் கலாம் பிறந்தநாள் யாழில் கொண்டாடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 16

இந்திய முன்னாள் குடியரசு தலைவர் கலாநிதி ஏ. பி. ஜே. அப்துல் கலாமின் 92ஆவது பிறந்த தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொது நூலகத்தில் நடைபெற்றது.

அவரின் சிலைக்கு யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார்.

மேலும், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் ஜெயசீலன், தலைமை நூலகர், நூலக அதிகாரிகள் மற்றும் தூதரக அதிகாரிகளும் இணைந்து அன்னாருக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாண பொது நூலகத்தில் கலாநிதி அப்துல் கலாமின் மார்பளவு திருவுருவ சிலையை நிறுவிய இந்திய அரசுக்கு யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் ஜெயசீலன் நன்றி தெரிவித்தார்.

அப்துல் கலாம் யாழ்ப்பாணத்துடனான தொடர்புகள் குறித்து பேசிய அவர், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் சந்திரயான் - 3 விண்ணில் ஏவப்பட்டதன் மூலம் விண்வெளித் துறையில் இந்தியாவை மிகப் பெரிய சாதனைக்கு இட்டுச் செல்கின்றது என்றும் கூறினார். (ஐ)



# யாழ்ப்பாணத்தில் நேற்று குருதிக் கொடை முகாம்!

யாழ்ப்பாணம், ஒக். 16

லயன்ஸ் கழகம், யாழ். நியூ வேர்ள்ட் அமைப்பினரின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் குருதிக் கொடை முகாம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் - ஆரியகுள சந்தியில் உள்ள முற்போக்கு வாலிபர் கழகத்தில் தலைவர் பிறேம்காந் தலைமையில் நடந்த இந்த முகாமில் பலர் பங்கேற்று குருதிக்கொடை வழங்கினர்.

அண்மைய நாட்களில் யாழ். போதனா மருத்துவமனையில் சில வகை குருதிகளுக்கு பற்றாக்குறை நிலவி வருகிறது. இந்தப் பற்றாக்குறையை போக்கும் நோக்கிலேயே இந்தக் குருதிக் கொடை முகாம் முன்னெடுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

# விவசாய உற்பத்திகளை யாழிலிருந்து நேரடியாக ஏற்றுமதி செய்ய வழிசெய்க

## விவசாய அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள விமானநிலையம், துறைமுகங்கள் ஊடாக விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய குழு கூட்டம் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடந்தது.

அதில் பங்கேற்ற அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 2018-19 காலப்பகுதியில் விவசாய அமைச்சராக மகிந்த அமரவீரவும், விவசாய பிரதி அமைச்சராக நான் கடமையாற்றினேன். அப்போது, எமது யாழ். மாவட்டத்தில் விவசாய புத்தெழுச்சியை ஏற்படுத்த அமைச்சர் பெரும் முன்னெடுப்புகளை செய்திருந்தார். குறிப்பாக, உருளைக்கிழங்கு, மிளகாய் பயிர்ச் செய்கைகளின் ஊடாக யாழ் மாவட்ட விவசாய துறையை வருமானமீட்டும் துறையாக மாற்ற எம்மால் முடிந்திருந்தது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குகளை எமது விவசாயிகள் பயன்படுத்திவந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அவற்றை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, எமது விவசாயிகளுக்கு உள்ளூர் விதை உருளைக்கிழங்குகளை பெற்று வழங்குவதற்கு அமைச்சர் உதவி செய்ய வேண்டும்.

அதேவேளை, எமது விவசாயிகளின் உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்க்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. உள்ளூர் ஏற்றுமதி சந்தைகளை தாண்டி ஐரோப்பா உள்ளிட்ட சர்வதேச சந்தைகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை பெற்றுத்தர வேண்டும்.

தற்போது, இந்தியாவுடனான கடல் மற்றும் வான் வழி தொடர்புகளை யாழ் மாவட்டம் கொண்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்திய சந்தை வாய்ப்புகளை எமது உற்பத்திகளுக்கு ஏற்படுத்தி கொடுக்க முடியும்.

ஆகவே, கடந்த காலங்களில் எமது விவசாயத்துறைக்கு மேற்கொண்ட உதவிகள் போன்று தற்போதைய இந்த நல்வாய்ப்புகளை பயன்படுத்தவும் உதவிகளை செய்ய வேண்டும் என அமைச்சர் மகிந்த அமரவீரிடம் வேண்டுகோள் விடுக்கிறேன் - என்றார் (ஐ)

# பெண் மீது தாக்குதல் தம்பதியர் கைதாகினர்!

கொழும்பு, ஒக். 16

தனியார் நிறுவனத்தில் பெண் ஒருவர் தாக்கப்பட்ட காணொலிகள் சமூக ஊடகங்களில் பரவியதனையடுத்து சந்தேகத்தின் பேரில் தம்பதியர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா- கந்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகொட பகுதியில் தனியார் நிறுவனமொன்றில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி நேற்றுமுன்தினம் இரவு கந்தானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லிப்டன் வீதி, நாகொட பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தானை, நாகொட பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய தம்பதியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தாக்குதலுக்கு உள்ளான பெண்ணின் உறவினர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# சட்டவிரோத மீன்பிடி 27 இந்திய மீனவர் கைது!

கொழும்பு, ஒக். 16

யாழ்ப்பாணம், மன்னார் கடற்பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 27 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 3 படகுகளும் கையகப்படுத்தப்பட்டன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மன்னார் கடற்பகுதியில் கடற்படையினர் முன்னெடுத்த கண்காணிப்பின் போது சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 2 படகுகளும் கையகப்படுத்தப்பட்டன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# பண்டாரவளை நகரம் வெள்ளத்தில் மூழ்கியது



**கொழும்பு, ஒக். 16**

**நேற்றைய தினம் பெய்த கனமழை காரணமாக பதுளையின் பண்டாரவளை நகரின் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியது.**

கொழும்பு -பதுளை பிரதான வீதியில் பண்டாரவளை நகரப் பகுதியே வெள்ளத்தில் மூழ்கியது. சுமார் நான்கு அடிக்கு வீதியில் வெள்ளம் ஓடியதாக அப்பகுதியினர் தெரிவித்தனர்.

இதனால் புலமைப்பரிசில் பரீட்சை முடிந்து வீடுகளுக்கு செல்ல வந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

இதன் காரணமாக வாகனங்களின் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# ஒற்றுமையின்றி அரசை தோற்கடிக்க முடியாது!

## இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஒக். 16

ஊழல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் இந்த அரசாங்கத்தை ஒற்றுமையின்றி தோற்கடிக்க முடியாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஐக்கிய குடியரசு முன்னணியுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அனைத்து கட்சிகளும், தொழிற்சங்கங்களும், வெகுஜன அமைப்புகளும், ஊடக நிறுவனங்களும் அரசாங்கத்துக்கு எதிராக பெரும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

முதல்கட்டமாக அனைத்து அமைப்புகளும் இணைந்து கூட்டமொன்றை ஏற்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு கொண்டுவந்துள்ள பயங்கரவாத ஒழிப்புச் சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் ஆகியவை ஜனநாயகத்திற்கு எதிரானது என ஐக்கிய நாடுகள் சபை கூட கூறியுள்ளது.

நாட்டு மக்கள் வாழக்கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு எதிராக தொழிற்சங்கங்கள் பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

அதற்காக நாட்டின் அனைத்து அமைப்புகளும் ஒன்றுபட வேண்டும். இந்த அரசாங்கம் 134 என்ற அதிகாரத்தை பாராளுமன்றத்தில் வைத்துக்கொண்டு இவ்வாறான உத்தரவுகளையும் சட்டமூலங்களையும் கொண்டு வந்து தன்னிச்சையாக நடந்து கொள்ள அனுமதிக்க முடியாது" என்றார்.

(ஐ)

# சிங்கள நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தெற்கு சக்திகள் போராட வரவேண்டும்!

## அருட்தந்தை சக்திவேல் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 16

பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தெற்கின் சக்திகள் போராடுவதை வரவேற்கின்றோம். அத்துடன், பௌத்த - சிங்கள நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் குரல் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தாலே பாலஸ்தீனத்துக்கான போராட்டம் உண்மையானதாக அமையும் என சமூக நீதிக்கான செயல்பாட்டாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த அறிக்கையில்,

பலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்துக்கும், இஸ்ரேல் படைகளுக்கும் இடையில் வெடித்திருக்கும் போர் மிகவும் உக்கிரமானது. ஒன்றும் அறியாத சாதாரண மக்கள், பெண்கள், பிள்ளைகள், குழந்தைகள் என இரு பக்கமும் ஆயிரங்களை தாண்டி இதுவரை கொல்லப்பட்டும் - காயப்பட்டும் உள்ளனர்.

இதனை மனித நேயம் கொண்டவர்களால் அங்கீகரிக்க முடியாது. இத்தகைய நிலை உருவாவதற்கு யுத்தத்தை விரும்பும் பயங்கரவாத நாடுகளும், அதற்கு அமைதி காத்து அனுமதி அளிக்கும் உறவு நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் பொறுப்புக்கூற வேண்டும்.

இலங்கையில் வட, கிழக்கு தமிழர்களின் நீண்ட நாள் அரசியல் அபிலாசைகள் தீர்க்கப்படாததன் காரணமாகவே பல்வேறு விடுதலை அமைப்புகள் தோற்றம் பெற்றன. இறுதியில் பிரச்னைக்கு தமிழீழ விடுதலை இயக்கமே காரணம் என அவர்களை அழித்தவர்கள் இதுவரை வட, கிழக்கு தமிழர்களின் இறைமையை அங்கீகரிக்காமல் பௌத்த - சிங்கள மேலாண்மை வாதத்தில் இராணுவத்தின் துணையோடு, இராணுவ முகம் கொண்ட சிங்கள - பௌத்த பிக்குகளை ஏவிவிட்டு நில ஆக்கிரமிப்பை தொடர்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தினமும் வீதியில் நின்று போராடுவதற்கு தள்ளப்பட்டுள்ளனர். அதன் இன்னும் ஒரு வடிவமே மட்டக்களப்பு மேய்ச்சல் தரை மீட்பு போராட்டம்.

வட, கிழக்கு தமிழர்களின் இறைமையை அங்கீகரிக்காமல், அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றாமல், அவர்களது பாரம்பரிய தாயக பூமியை ஆக்கிரமித்து பௌத்த பூமியாக்க துடிக்கும் பௌத்த துறவிகளுக்கு அனுமதி அளிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாலஸ்தீன- இலங்கை நட்புறவு அமைப்பின் தலைவராக இருப்பது தேச விடுதலைக்காக ஏங்கி நிற்கும் பலஸ்தீன மக்களுக்கு அவமானமே. இலங்கை மக்களுக்கு அது நகைப்புக்கிடமானதே.

அது மட்டுமல்ல, பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தெற்கின் சக்திகள் முகநூலில் பதிவிடுவதோடு போராட்டத்தை முன்னெடுப்பதோடு போராட்டத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். இதனை நாம் வரவேற்கின்றோம்.

அதே நேரம் அவர்களிடம் நாம் "வடகிழக்கு தமிழர்களின், மலையகத் தமிழர்களின் இறைமைக்கும், அரசியல் அவிலாசைகளுக்கும், தாயக கோட்பாட்டுக்கும் ஆதரவாகவும் குரல் கொடுக்க வேண்டும் என கேட்பதோடு பௌத்த சிங்கள நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் குரல் கொடுக்க வேண்டும் எனவும் கூறுகின்றோம். அவ்வாறு நீங்கள் செய்தால் மட்டுமே பலஸ்தீனத்துக்கான உங்கள் போராட்டம் உண்மையானதாக அமையும் - என்றுள்ளது.

(ஐ)

# அரச ஊழியரின் சம்பளம் அதிகரிக்கப்பட வாய்ப்பு!

## மகிந்தானந்த எம். பி.

கொழும்பு, ஒக். 16

இந்த வருட வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக ஆளும் தரப்பின் மகிந்தானந்த அளுத்கமகே எம். பி. தெரிவித்தார்.

இந்த நாட்டுக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்க பல நாடுகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருப்பதால் அடுத்த மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி கிடைத்தவுடன் நிறுத்தப்பட்ட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

(ஐ)

# மின் கட்டணம் உயரும்போது நீர் கட்டணமும் அதிகரிக்கும்!

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 16

மின்சார கட்டணத்துடன் தண்ணீர் கட்டணமும் அதிகரிக்கப்படும் என நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோகத்துக்கு அதிகளவில் மின்சாரம் பயன்படுத்தப்படுவதால், இழப்பை ஈடுகட்ட குடிநீர் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தண்ணீர் கட்டணம் அதிகரிக்கப்பட்டாலும் சபைக்கு நட்டம் ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார கட்டணம் அதிகரித்தால் நட்டம் மேலும் அதிகரிக்கும் என்பதால் குறிப்பிட்ட சதவீதத்தால் தண்ணீர் கட்டணம் அதிகரிக்கப்படும் என்றார்.

# இசோலெஷ் பயோ நிறுவனத்தின் மருந்து விநியோக உரிமம் நிறுத்தம்!

கொழும்பு, ஒக். 16

இசோலெஷ் பயோ - ரெக்பர்மா என்ற நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட அனைத்து மருந்து விநியோக உரிமத்தை உடனடியாக இடைநிறுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய மருந்து மோசடிகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களின் தலைவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உத்தரவுகளையும் பெற வேண்டிய மருந்துகளையும் இடைநிறுத்தவும் இரத்து செய்யவும் சுகாதார அமைச்சர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார், அதே நேரத்தில் இந்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நிறுவனத்துடன் தொடர்புடைய மருந்து மோசடிகள் தொடர்பான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் முடியும் வரை ஓடர்கள் மற்றும் பணம் செலுத்துதல் இடைநிறுத்தம் நடைமுறையில் இருக்கும்.

இசோலெஷ் பயோ - ரெக்பர்மா மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி சி. ஐ. டியிடம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான சட்ட ஆலோசனைகளை பெற்று, இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு சுகாதார அமைச்சர் சட்டமா அதிபருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

இதேவேளை, போலி ஆவணங்கள் மற்றும் கையொப்பங்களைப் பயன்படுத்தி இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் விசாரணை நடத்துமாறும், மருந்துகளை சந்தைக்கு வெளியிடுவதை நிறுத்துமாறும் கோரி இதுவரை குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு ஐந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் சி. ஐ. டி. அதிகாரிகள் ஆய்வு செய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# புலம்பெயர் தமிழருடன் பேச்சில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் தயார்!

## பிரட்டனின் தலையீட்டை கோருகிறார் அலி சப்ரி

கொழும்பு, ஒக். 16

**பிரித்தானியாவில் பிரிவினை சிந்தனையல்லாத புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு மேசையில் அமர்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. இதற்கான செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கும், அந்தப் பேச்சுகள் வெற்றியடைவதற்கும் பிரித்தானிய அரசாங்கம் தலையீடுகளை செய்யும் வகையிலான வகிபாகத்தை கொண்டிருக்க வேண்டும் என்று தன்னை சந்தித்த பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியனிடத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை விடுத்தார்.**

அதேநேரம், பிரித்தானியாவில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் வடக்கு, கிழக்கில் தாராளமான முதலீடுகளை மேற்கொள்வதற்கும், தொழில்சார் பயிற்சி நிலையங்களை முன்னெடுப்பதற்கும் முன்வரவேண்டுமென்றும் கோரினார் என்றும் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி, இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் விடயத்தில் வெளியாரின் தலையீட்டை விரும்பவில்லை என்பதையும், உள்ளக ரீதியிலான முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதை வெளிப்படுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியனுடனான சந்திப்பின்போது முக்கியமாக பிரித்தானியாவுக்கும், இலங்கைக்கும் நீண்டகாலமாக காணப்படுகின்ற இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் தீவிரமான கரிசனைகள் செலுத்தப்பட்டன.

இதனையடுத்து, பிரித்தானியாவின் முதலீடுகள் மற்றும் ஏனைய ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எமது தரப்பில் விடுக்கப்பட்டது.

இதேநேரம், இலங்கையில் நீடித்துக்கொண்டிருக்கும் இனங்களுக்கு இடையிலான பிரச்னைகள் மற்றும் ஏனைய உள்நாட்டு விடயங்கள் சம்பந்தமாக பிரித்தானியாவில் உள்ள புலம்பெயர் தமிழர்களும் கனதியான வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றார்கள். அதனடிப்படையில் பிரிவினை சிந்தனை அல்லாத, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வினை எட்டுவதற்கு எதிர்பாக்கின்ற அனைத்து தரப்புக்களையும் ஒருங்கிணைத்து பேச்சு மேசையில் அமர்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக உள்ளது.

அவ்விதமான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு, முன்னேற்றகரமான வெற்றிகர விளைவுகள் ஏற்படுவதற்கு பிரித்தானியாவும், பொதுநலவாய



நாடுகளும் தலையீடுகளை செய்கின்ற வகையிலான வகிபாகத்தினைக் கொள்ள வேண்டும். அதற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் கோட்டுக்கொண்டுள்ளோம்.

அதுமட்டுமன்றி, வடக்கு, கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும், தொழில்சார் பயிற்சி மையங்களை அமைப்பதற்கும் பிரித்தானியாவுக்கும், அங்குள்ள புலம்பெயர் அமைப்புகளுக்கும் பகிரங்கமான கோரிக்கைகளை முன்வைத்துள்ளதோடு, அதன்மூலமாக வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் உள்ள சமூகங்கள் பெரியளவிலான முன்னேற்றங்களை காண முடியும் என்ற விடயத்தையும் சுட்டிக்காட்டியுள்ளேன்.

அதேவேளை, இலங்கை அரசாங்கம், மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் கூடியளவிலான கரிசனைகளை கொண்டிருப்பதோடு, இந்த விடயங்களில் எந்தவொரு வெளியாரினது தலையீடுகளையும் விரும்பவில்லை என்கின்ற விடயத்தினையும் அவரிடத்தில் குறிப்பிட்டேன். உள்நாட்டில், காணப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு அமைவாக பொறிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும் அவருக்கு எடுத்துரைத்தேன். குறிப்பாக, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய பணிமனை இழப்பீட்டுப் பணியகத்துக்கான செயல்பாடுகள் என்பனே முன்னேற்றம் கண்டுள்ளதோடு அடுத்த கட்டமாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை விரைவில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்த்துள்ளமையும் எடுத்துக் கூறியுள்ளேன்.

விசேடமாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை ஸ்தாபித்து அதனை முன்னெடுப்பதற்கு பிரித்தானியாவின் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று கோரியபோது அதற்கான வரவேற்பையும் தமது பங்களிப்பையும் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதோடு இந்தச் செயற்பாடுகளிலும் பிரித்தானியா மற்றும் புலம்பெயர் தமிழர்கள் பங்களிப்பு செய்ய வேண்டியது அவசியமானது என்பதையும் வெளிப்படுத்தினோம்.

மேலதிகமாக கண்ணிவெடி அகற்றுதல் உட்பட பல்வேறு சமூகம் சார்ந்த பிரித்தானியாவின் செயற்பாடுகளை நினைவுகூர்ந்து நன்றிகளைத் தெரிவித்ததோடு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் 75ஆண்டுகளை எட்டியிருக்கும் நிலையில் அந்த உறவுகள் மேலும் வலுப்பெறுவதற்கு பரஸ்பரம் தொடர்ச்சியான பங்களிப்பையும் ஒத்துழைப்புக்களையும் நல்குவதெனவும் உறுதியளிக்கப்பட்டது - என்றார்.

(ஐ)

# கண் நோயிலிருந்து தப்ப பாதுகாப்பாக இருங்கள்!

கொழும்பு, ஒக். 16

கண் நோய்கள் அதிகளவில் பரவி வருவதாக கொழும்பு தேசிய கண் மருத்துவமனையின் விசேட கண் சத்திரசிகிச்சை நிபுணர் கபில பந்துதிலக்க தெரிவித்துள்ளார்.

கண் நோய்களில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கண்கள் சிவத்தல், இமைகள் வீங்குதல் ஆகியன இந்த நோய்களுக்கான அறிகுறிகளாகும்.

குழந்தைகள் மத்தியில் அதிகமாக பரவி வரும் இந்நோய் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் தொடுகை மூலமே இந்த நோய் பரவக்கூடிய அபாயம் அதிகமாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# டிஜிற்றல் நுட்ப விவசாயம்; ஒப்பந்தம் கைச்சாத்தானது!

கொழும்பு, ஒக். 16

இலங்கையில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்துவதற்காக பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவனத்துடன் அரசாங்கம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒன்று விவசாயத்துறையில் உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்தை அதிகரிக்கும் நோக்கத்துக்காக டிஜிற்றல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான மென்பொருளை அறிமுகப்படுத்துவதாகும்.

விவசாய துறையை அபிவிருத்தி செய்வதற்காக ஏழு அமைச்சுக்களிடமிருந்து உரிய தரவுகள் பெறப்பட்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. புதிய மென்பொருள், உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் விளைச்சலை நேரடியாக அளவிடுவதற்கும், கிடைக்கும் விளைச்சலைப் பாதுகாப்பதற்கும் தேவையான வழிகாட்டுதலை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டமாகவும் இது அமையும்.

இலங்கையின் விவசாய அபிவிருத்திக்காக 25 கோடி டொலர்கள் மானியமாக இத்திட்டத்தின் மூலம் பெறப்பட்டு விவசாயத் துறையில் தரவுகளை சேகரித்து நெல் மற்றும் ஏனைய பயிர்களின் ஊட்டச்சத்தை அதிகரிப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.

(ஐ)

# 9 மாத குழந்தைக்கு தடுப்பூசி; கை, கால்கள் செயலிழந்தன!

கொழும்பு, ஒக். 16

தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் ஒன்பது மாத குழந்தையின் கை, கால்கள் செயலிழந்துள்ளன என்று பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

காலி மாவட்டத்தின் எல்பிட்டி - தம்புலு உயன பகுதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரிக்கு இது குறித்து தெரியப்படுத்தியதையடுத்து, ஐநூறு குழந்தைகளில் ஒருவருக்கு இது போன்று நடக்கலாம் என அவர் தெரிவித்தார் என்று பெற்றோர்கள் கூறினர்.

எனினும், தமது குழந்தை பிறந்து ஆரோக்கியமாக இருந்ததாகவும், தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னரே, அதன் உடல் உறுப்புகள் செயலிழந்தன என்று பெற்றோர், குற்றம் சுமத்துகின்றனர்.

(ஐ)

# முன்னாள் பிரதி சபாநாயகரின் இல்லத்தில் ஆயுதங்கள் சிக்கின

கொழும்பு, ஒக். 16

முன்னாள் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறிக்கு சொந்தமான வெல்லவாய பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

புத்தல விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளினால் இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று வெல்லவாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, இங்கிலாந்து, ரஷ்யா தயாரிப்பிலான இரண்டு துப்பாக்கிகள், இரண்டு கைக்குண்டுகள் உள்ளிட்ட பல தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதி சபாநாயகர் தற்போது அந்த வீட்டில் வசிக்கவில்லை என்பதுடன் சம்பவம் தொடர்பில் அந்த வீட்டில் இருந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)

# இரு குழுக்கள் மோதல்; ஒருவர் சுட்டுக் கொலை!

கொழும்பு, ஒக். 16

இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு அநுராதபுரம் - இராஜாங்கனை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான எம்.ரி. மாரப்பன (வயது 62) என்பவரே இதில் உயிரிழந்தார். இவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

# எதிர்க்கட்சி தலைவராக நாமலை நியமிக்க திட்டம்?

கொழும்பு, ஒக். 16

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குழு ஒன்று எதிர்க்கட்சியில் அமர தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகின. இது சாத்தியமானால் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கும் சாத்தியம் தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கு பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக இவ்வாறானதொரு கடுமையான தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியில் அமர்வதால் அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்தலாம் என சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ)

### நற்பிட்டிமுனை பிள்ளையார் ஆலயத்தில்

# அம்மன் சிலையை அகற்ற நீதிமன்று இடைக்கால தடை!

காரைதீவு, ஒக். 16

**கல்முனை மாநகரை அடுத்துள்ள நற்பிட்டிமுனை கணேசர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள அம்மன் சிலையை அங்கிருந்து அகற்ற கல்முனை மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு விதித்துள்ளது. கரைவாகுப்பற்றை இறுதியாக ஆண்ட செல்லையா வன்னிமையின் பெண்ணடி சார்பில் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் ஒன்பது பேர் இந்த வழக்கை கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.**

“கடந்த 400 வருடங்களாக நடைபெற்று வந்த பாரம்பரிய வழிபாட்டு முறைக்கு மாறாக நற்பிட்டிமுனை கணேசர் ஆலயத்திலிருந்து அம்மன் சிலையை சேனைக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் ஆலயத்துக்குக் கொண்டு செல்வதற்கு பதிலாக, பிரதிவாதிகளால் சட்டவிரோதமாக அனுமதியின்றி நற்பிட்டிமுனையில் கட்டப்பட்ட புதிய ஆலயத்துக்கு கொண்டு செல்ல பிரதிவாதிகள் தீர்மானித்தனர்.



இதனால் இரண்டு ஊர்களுக்கும் இடையே பகைமை ஏற்பட்டு உயிர் இழப்புகளும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதால், இதனை தடை செய்யுமாறு கோரி இந்த வழக்கு சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட குழுவினர் தாக்கல் செய்யப்பட்டது.

கணேசர் ஆலய தலைவர் தம்பிராசா ரவிராஜ் உள்ளிட்ட நான்கு பேருக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கை விசாரித்த கல்முனை மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி ஏ.எம்.எம். ரியால், சிலையை மாற்ற இடைக்கால தடை உத்தரவை வழங்கியுள்ளார் என்று, வழக்கு விசாரணையில் ஆஜராகியிருந்த பிரபல சிரேஷ்டசட்டத்தரணி ஏ. ஆர் .எம். கலீல் தெரிவித்தார்.

இந்தவழக்கு பதில் நீதிபதி ஏ.எம் .ரியால் தலைமையில், வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது சட்டத்தரணி கலீல், அம்மன் சிலையை அங்கிருந்து கொண்டுசெல்லும்போது சேனைக்குடியிருப்பு மற்றும் நற்பிட்டிமுனை மக்களிடையே முரண்பாடு ஏற்பட்டு அதுவே கலவரமாக மாறி, உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். எனவே இதனை தடை செய்யுமாறு கோரி நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

சட்டத்தரணி கலீலின் வாதம், சத்திய கூற்று மற்றும் ஆவணங்களையும் அவதானித்த நீதிபதி “இடைக்கால தடை உத்தரவு ஒன்று வழங்கப்படும் வரை நற்பிட்டிமுனை சிறீ கணேசர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற அம்மன் சிலையானது பிரதிவாதிகளோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களாலோ அல்லது வேற வேறெவராலுமோ அங்கிருந்து அகற்றப்படக்கூடாது என்றும், குறித்த அம்மன் சிலையானது நற்பிட்டிமுனை சிறீ கணேசர் ஆலயத்திலேயே இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். (ஐ)



## புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்க்கு ஆசிவேண்டி விசேட பூசை!

காரைதீவு, ஒக். 16

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் இந்த முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோன்றிய 22 மாணவர்களுக்கும் ஆசி வேண்டி பாடசாலையில் நேற்று விசேட பூசைகள் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நாவிதன்வெளி முத்து மாரியம்மன் பிரதமகுரு சுவேந்திரன் குருக்கள் இவ் விசேட பூசைகளை நடாத்தி மாணவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார்.

பாடசாலையின் ஆரம்பநெறி பகுதித் தலைவர் திருமதி விஜய பிருந்தா பிரதீபனின் ஏற்பாட்டில் இந்த விசேட பூசை நடைபெற்றது.

இதில், தரம் 5 மாணவர்களுடன் அவர்களின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## கந்தளாய் மருத்துவமனைக்கு சிறுநீரக நோய் சிகிச்சை இயந்திரம்!




திருகோணமலை, ஒக். 16

சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான இயந்திரங்கள் திருக்கோணமலை கந்தளாய், பதுளை மருத்துவமனைகளுக்கு கிழக்கு ஆளுநரிடம் வழங்கப்பட்டன.

ஐ.ஓ.சி நிறுவனத்தின் தலைவர் தீபக் தாஸிடம் கிழக்கு மாகாண ஆளுநர் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் மதிப்புள்ள இந்த உயிர்க்காக்கும் சிறுநீரக இயந்திரம் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இயந்திரங்களை கையளிக்கும் நிகழ்வு திருகோணமலை ஐ. ஓ. சி தலைமையகத்தில் நடைபெற்றது. (ஐ)

## திருமலை கடலில் ஒதுங்கும் பாசியால் மீனவர் பாதிப்பு!



திருகோணமலை, ஒக். 16

திருகோணமலை கடலில் ஒதுங்கும் கடற்பாசியால் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மிகவும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை கடற்பகுதியில் தற்போது கடற்பாசி ஒதுங்குவதால் மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்களின் வலையில் பொருமளவில் கடற்பாசிகளே சிக்குவதாகவும் இதனால் மீன்பிடியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பாசி நிறைவதால் வலையை இழுக்க முடியாதுள்ளதாகவும், வலையை சுத்தம் செய்வதற்கே அதிக நேரம் செலவாவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருகின்ற திருகோணமலை கடற்கரை, தற்போது பாசிகள் ஒதுங்கி அழகு குன்றி காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. (ஐ)

## புலமைப்பரிசில் பரீட்சை அம்பாறை, மட்டக்களப்பில் அமைதியாக நடந்தது

மட்டக்களப்பு, ஒக். 16

மட்டக்களப்பில் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி மாணவர்கள், காலையில் பரீட்சை நிலையங்களுக்கு ஆர்வத்தோடு சென்றதை அவதானிக்க முடிந்தது.

பட்டிருப்பு திருப்பழுகாமம் மகா விஸ்ணு ஆலயத்தில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு ஆசிர்வாதமும் வழங்கப்பட்டது.



அம்பாறை கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட 26 பாடசாலைகளில் இருந்து 2ஆயிரத்து 850 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை, பரீட்சை நிலையங்களுக்கு அழைத்து வந்த பெற்றோர்கள், தமது ஆசிகளை வழங்கி அனுப்பி வைத்தனர்.

பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தகவல் அறியும் உரிமை சட்ட செயலமர்வு காத்தான்குடியில்

மட்டக்களப்பு, ஒக். 16

காத்தான்குடியில் தகவல் அறியும் சட்டம் தொடர்பான செயலமர்வை காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் காத்தான்குடி மீடியா போரம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்து நடத்தின.



காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் செயலாளர் ஏ. எல். எம். சபீல் நழீமி தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் சம்மேளன பிரதி நிதிகள், உலமாக்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காஸாமீது வான், தரை, கடல்வழி தாக்குதலுக்கு படைகள் தயார்!

## இஸ்ரேல் அறிவிப்பு

** 2300 பலஸ்தீனர்கள் பலி*
** 1300 இஸ்ரேலியர்கள் பலி!*

டெல் அவிவ், ஒக். 16

**காஸா மீது தரை, கடல், வான் வழியாக தாக்குதல் நடத்துவதற்கு தமது படைகள் தயாராகிவிட்டன என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது. எனினும், தாக்குதல் தொடங்கப்படுவதற்கான நேரம் அறிவிக்கப்படவில்லை. காஸா மக்களை வெளியேற இஸ்ரேல் விதித்த காலக்கெடு நிறைவடைந்த நிலையில் இஸ்ரேலின் அறிவிப்பு பெரும் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது.**

**இதனிடையே, காஸாமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பொதுமக்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 329 பேர் கொல்லப்பட்டனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 9 ஆயிரத்து 714 பேர் காயமடைந்துள்ளனர்.**



இதேசமயம், ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது முதல் தொடர்ச்சியாக நடத்தப்படும் ஏவுகணை தாக்குதல்களாலும் இஸ்ரேலில் ஆயிரத்து 300 பேருக்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்தனர்.

நேற்று 9ஆவது நாளாகவும் தாக்குதல்கள் தொடர்ந்த நிலையில், காஸாவில் இருந்து 4 இலட்சம் பொது மக்களே வெளியேறியுள்ளனர். வெளியேறிய பொதுமக்கள் மீது இஸ்ரேல் நடத்திய வான் வழி தாக்குதலில் 70 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இதேசமயம், பொது மக்கள் வெளியேற்றத்தை ஹமாஸ் தடுத்து நிறுத்துகிறது என்று இஸ்ரேல் இராணுவம் குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்நிலையில், காஸாவில் இருந்து 24 மணி நேரத்தில் 11 இலட்சம் மக்களும் வெளியேற வேண்டும் என்று அறிவித்திருந்தது. பின்னர், நேற்று முன்தினம் மாலை 6.30 (பலஸ்தீன நேரம்) இந்தக் காலக்கெடுவை நீடித்திருந்தது. அந்தக் காலக்கெடு முடிந்த நிலையில், இஸ்ரேல் காஸா மீது படை நடவடிக்கையை ஆரம்பித்தது.

இதனிடையே, 300 பீரங்கிகளுடன் ஒரு இலட்சம் படையினர் அடுத்த கட்டத்துக்கு தயாராகிவிட்டனர் என்று இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவம் ரெடி பியர் என்று பெயர் சூட்டப்பட்ட புல்டோசர்களை போர்களத்தில் முன்னிறுத்தியுள்ளது.

டெடி பீர் புல்டோசர்கள் முன்னே செல்ல இஸ்ரேல் இராணுவ வீரர்கள் வடக்கு காஸா பகுதியின் பல்வேறு பகுதிகளில் நுழைந்து ஹமாஸ் தீவிரவாதிகளின் முகாம்கள், கட்டடங்களை தரைமட்டமாக்கி வருகின்றனர்.

இஸ்ரேல் எச்சரிக்கை: இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் ஜோனதான் நேற்று கூறும் போது, "பலஸ்தீனத்தில் ஹமாஸ் தீவிரவாதிகளுடன் தொடர்புடைய 1,000 இடங்கள் மீது தாக்குதல்களை நடத்தி உள்ளோம். பெரும்பலும் காஸா பகுதியின் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.காஸாவில் இருந்து வெளியேற அங்குள்ள மக்களுக்கு ஏற்கெனவே அறிவிப்பு வெளியிட்டு இருந்தோம். இனிமேலும் அங்கிருந்தால் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

(ஐ)

### ரெட்டி பீர் புல்டோசர்



ரெட்டி பீர் புல்டோசர் 26 அடி நீளம், 15 அடி அகலம், 13 அடி உயரம் கொண்டது. 550 தொன் நிறை உடையது. இந்த புல்டோசரில் சாரதியுடன் 2 வீரர்கள் அமர முடியும். கண்ணிவெடிகளால் புல்டோசர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. எதிரிகளை சுட்டு வீழ்த்த தானியங்கி துப்பாக்கிகள், ஆர். பி. ஜி. ஆயுத அமைப்புகள், கண்ணீர் புகைக்குண்டுகளை வீசும் கருவிகள் உள்ளிட்டவை புல்டோசரில் பொருத்தப்பட்டுள்ளன.

குண்டு துளைக்காத கண்ணாடி இந்த ஆயுதங்கள் மூலம் எதிரிகள் மீது தாக்குதல் நடத்தி கொண்டே புல்டோசர்கள் முன்னேறி செல்லும். அனைத்து கட்டடங்களையும் இடித்து தரைமட்டமாக்கும்.

# நியூசிலாந்து பொது தேர்தல் எதிர்க்கட்சி வெற்றி பெற்றது!




ஹமில்ரன், ஒக். 16

நியூசிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி பெற்றது. தேசிய கட்சியின் தலைவரான கிறிஸ்தோபர் லக்சன் நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

நியூசிலாந்து நாட்டின் பிரதமராக இருந்த ஜெசிந்தா ஆர்டன் கடந்த ஜனவரி மாதம் தனது பதவியை இராஜிநாமா செய்வதாக அறிவித்தார்.

கொரோனா தொற்று நடவடிக்கை, ஊழல் குற்றச்சாட்டு போன்ற காரணங்களால் பொது மக்களின் நம்பிக்கையை இழந்த நிலையில் பதவியை இராஜிநாமா செய்தார்.

இதனையடுத்து பிரதமராக கிறிஸ் ஹிப்கின்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். 9 மாதங்கள் கடந்தநிலையில் நாட்டின் 54ஆவது பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டது.

ஆளும் தொழிலாளர் கட்சி சார்பில் கிறிஸ் ஹிப்கின்ஸ் பிரதமர் பதவிக்காக வேட்புமனு தாக்கல் செய்தார். அவரை எதிர்த்து தேசிய கட்சி சார்பில் அதன் தலைவர் கிறிஸ்டகிறிஸ்தோபர் லக்சன் என்பவர் போட்டியிடுவதாக அறிவித்தார்.

இந்நிலையில் பாராளுமன்ற பொதுத்தேர்தல் அறிவித்தப்படி, வெற்றிகரமாக இடம்பெற்று முடிந்தது. மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் வாக்களித்தனர்.

வாக்கெடுப்பு நடந்து முடிந்து ஓட்டு எண்ணிக்கை உடனடியாக நடத்தப்பட்டது. இதில் ஆளுங்கட்சியான தொழிலாளர் கட்சி 26 சதவீத வாக்கு எண்ணிக்கையை பெற்றது. அதனை எதிர்த்த தேசிய கட்சி 40 சதவீதத்துக்கும் அதிகமான வாக்கு சதவீதத்தை பெற்றது. மேலும் அதன் கூட்டணி கட்சியான அக்ட் கட்சி 10 தொகுதிகளை வென்றது.

இதனால் வலதுசாரி கட்சியான தொழிலாளர்-அக்ட் கூட்டணி தேர்தலில் அபார வெற்றி பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கிறிஸ்தோபர் லக்சன்(வயது 53) கடந்த 2020 ஆம் ஆண்டு தொழிலாளர் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு கட்சி பணியாற்றினார்.

அப்போதைய தேர்தலில் எம். பியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2022 ஆம் ஆண்டு கட்சியின் தலைவராக பதவி வகித்தார்.

தேர்தலில் வெற்றிப்பெற்றுள்ள அவர் நாட்டின் 42ஆவது பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

# 2ஆவது அமெரிக்க கப்பலும் மத்திய தரை கடலில் நிறுத்தம்!



நியூயோர்க், ஒக். 16

ஹமாஸ் அமைப்புக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா முழு ஆதரவு அளித்துள்ளது. இதன்படி, இஸ்ரேலுக்கு தேவையான ஆயுத உதவிகளை அமெரிக்கா வழங்கி வருகிறது.

மேலும், இஸ்ரேல் மீது அண்டை நாடுகள் தாக்குதல் நடத்துவதை தடுக்கும் வகையிலும், போரில் ஈரான் உள்ளிட்ட பிறநாடுகள் பங்கேற்கக்கூடாது என எச்சரிக்கும் வகையிலும் உலகிலேயே மிகப்பெரிய விமானம் தாங்கி போர் கப்பலான யு. எஸ். எஸ். ஜெரால்ட் ஆர் போர்டை இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது. இந்த விமானம் தாங்கி போர்க் கப்பல் இஸ்ரேல் எல்லை அருகே மத்திய தரைக்கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேலுக்கான ஆதரவை மேலும் உறுதி செய்யும் வகையிலும், ஈரான் உள்ளிட்ட நாடுகளை எச்சரிக்கும் வகையிலும் 2ஆவது விமானம் தாங்கி போர்க் கப்பலை அமெரிக்கா மத்திய தரைக்கடல் பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த விமானம் தாங்கி போர்க் கப்பலுடன் மேலும் சில போர்க் கப்பல்களும் இஸ்ரேலுக்கு ஆதரவாக மத்திய தரைக்கடலில் நிலைநிறுத்தப்படவுள்ளன. இதனால், வளைகுடா நாடுகளில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

(ஐ)

# குடிதண்ணீர் இல்லாமல் 23 இலட்சம் பேர் பரிதவிப்பு

காஸா, ஒக். 16

பலஸ்தீனத்தின் காஸா பகுதியை சேர்ந்த 23 இலட்சம் பேர் குடிதண்ணீர் இன்றி பரிதவித்து வருகின்றனர் என்று ஐ. நா. சபை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் இராணுவம், பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையே நேற்று 9ஆவது நாளாக போர் நீடித்தது.

போர் தொடங்கிய உடன் காஸா பகுதிக்கான குடிநீர், உணவு பொருட்கள், மின்சாரம், எரிபொருள் விநியோகத்தை இஸ்ரேல் இராணுவம் நிறுத்தி விட்டது. இதன்காரணமாக காஸா பகுதி மக்கள் குடிதண்ணீர், உணவு இன்றி பரிதவித்து வருகின்றனர்.

இதுகுறித்து ஐ.நா. சபையின் பலஸ்தீன அகதிகள் அமைப்பின் செயலாளர் பிலிப் கூறுகையில்,

கடந்த ஒரு வாரமாக காஸாவுக்கான குடிநீர், உணவு பொருட்கள், மின்சாரம், எரிபொருள் விநியோகம் முழுமையாக தடைபட்டுள்ளது. காஸா பகுதி குடிநீர் கையிருப்பு முழுமையாக தீர்ந்து விட்டது. இதன்காரணமாக 23 இலட்சம் மக்கள் குடிதண்ணீரின்றி பரிதவித்து வருகின்றனர்.

உடனடியாக குடிதண்ணீர் கிடைக்காவிட்டால் பொது மக்கள் உயிரிழக்கும் அபாயம் உள்ளது. கிணறுகள், நீர்நிலைகளில் உள்ள அசுத்தமான நீரை மக்கள் பருகி வருகின்றனர். இதனால் பல்வேறு நோய்கள் பரவி வருகின்றன - என்றார்.

(ஐ)

# நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்கும் முயற்சியில் ஜனாதிபதி, பெரமுன!

**அடுத்த 15 வருடங்களுக்கு மொட்டுக் கட்சியால் ஜனாதிபதியை உருவாக்க முடியாது என்பதால்**

கொழும்பு, ஒக். 16

**அடுத்த 15 வருடங்களுக்கு பொதுஜன பெரமுனவில் இருந்து ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாது என்பதற்கு வலுவான சாத்தியக்கூறுகள் இருப்பதாலேயே நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவினரும் ஈடுபட்டுள்ளனரென அக்கட்சி வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் ஆழமான கருத்தாடங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதன் பிரகாரம்தான் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக வலுவான இடத்தைப் பெறுவது பஸிலின் திட்டமாக உள்ளது. இதன்படி, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதே இந்த நேரத்தில் சிறந்த தெரிவு என்பது பஸில் ராஜபக்ஷவின் முன்மொழிவாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பில் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன. சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதனை நீக்குவது இலகுவானது எனவும், அதன் பின்னர் நிறைவேற்று முறைமை அவசியமா என மக்களிடம் கேட்க முடியும் எனவும் பஸில் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் பின்னர் பிரதமர் தலைமையிலான பாராளுமன்ற முறைமைக்கு செல்ல முடியும் என பசில் ஜனாதிபதியிடம் விளக்கமளித்துள்ளார்.

நிறைவேற்று முறைமையை இல்லாதொழிக்க தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதனை ஐக்கிய மக்கள் சக்தியாலும் தேசிய மக்கள் சக்தியாலும் எதிர்க்க முடியாது என்பது பஸிலுக்கு தெரியும். அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து அல்லது தனித்தனியாகப் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குள் குறிப்பிடத்தக்களவு இடத்தை பெற முடியும் என்பது பஸிலின் கணிப்பாக உள்ளது.

பஸில் பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியை சந்தித்து இந்த அரசியல் குண்டை வீசியதற்கு இதுவே காரணம் என அக்கட்சியின் வட்டாரங்களில் மேலும் அறிய முடிகிறது.

(அ)



# பொகவந்தலாவை மண் சரிவு; 5 குடியிருப்புகள் முற்றாக அழிவு

நுவரெலியா, ஒக். 16

பொகவந்தலாவை, தெரேசியா தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்பு ஒன்றின் பின்புறமாக நேற்று மண்மேடு சரிந்து விழுந்ததில் ஐந்து குடியிருப்புக்கள் முற்றாக சேதமடைந்தன என்று நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

தெரேசியா தோட்டத்திலுள்ள முதலாம் லயன் குடியிருப்பு தொகுதியொன்றில் ஐந்து குடியிருப்புகளின் பின்பகுதியில் இந்த மேடுகள் சரிந்து விழுந்துள்ளன, குடியிருப்புகளின் பின்பகுதியில்தான் சமையலறைகள் அமைந்துள்ளன.

பாதிப்படைந்த குடியிருப்புகளில் வசித்த ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் அந்தத் தோட்டத்தின் மற்றுமொரு பாதுகாப்பான கட்டிடத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். குடியிருப்புக்களின் மீது வீழ்ந்துள்ள மண்மேடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று பொகவந்தலாவை தெரேசியா தோட்டத்தின் தோட்ட அதிகாரி இமேஷ் போகவத்த தெரிவித்துள்ளார்.

(ஐ)

*மண் சரிவு அபாயம்:*

# கொஸ்லாந்தை பகுதியிலிருந்து 248 குடும்பங்கள் வெளியேற்றம்!

கொழும்பு, ஒக். 16

மண்சரிவு அபாயம் காரணமாக, பதுளை - கொஸ்லாந்தை மீரியபெத்தவிலிருந்து 248 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பரிந்துரைகளின் படி, 768 பேர் தமது வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று ஹல்துமுல்லை பிரதேச செயலாளர் கே.ஏ.ஜே.பிரியங்கிகா தெரிவித்துள்ளார்.

இதன்படி, மீரியபெத்தையில் முன்னதாக மண்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த 144 குடும்பங்களும், மஹகந்த பகுதியைச் சேர்ந்த 23 குடும்பங்களும், திவுல்கஸ்முல்ல பகுதியை சேர்ந்த 81 குடும்பங்களும் நலன்புரிமுகாம் களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

*புலமைப்பரிசில் பரீட்சை:*

# பேருந்துகள் இல்லாததால் மாணவர்களுக்கு பாதிப்பு

கொழும்பு, ஒக்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்றது. எனினும், ஹலிஎல திகல்ல கிராமத்தில் இருந்து பரீட்சைக்கு தோற்றுவதற்காக வந்த மாணவர்களுக்கு பேருந்துகள் இல்லாததால் மாணவர்களும் பெற்றோர்களும் பெரும் சிரமத்திற்குள்ளாகினர்.

தீகல்ல உடகமவிலிருந்து பதுளை நோக்கி இரண்டு பேருந்துகள் காலை 5.55 மற்றும் 6.30 மணியளவில் பயணத்தை ஆரம்பிக்கும். எனினும், நேற்று ஒரு பேருந்துகூட ஓடவில்லை என தீகல்ல உடகம கிராம மக்கள் தெரிவித்தனர்.

இதன்காரணமாக தீகல்ல உடகம, பனகன்னிய, அஹஸ் போகுன, ஊவா கெட்டவல வத்த, திக்வெல்ல வத்த, போன்ற பல கிராமங்களில் இருந்து நேற்று காலை மாணவர்கள் தமது பெற்றோருடன் ஹாலிஎல, பதுளை, கந்தேகெதர நகரங்களில் உள்ள பாடசாலை பரீட்சை நிலையங்களுக்கு செல்வதற்காக வருகை தந்துள்ளனர். கெட்டவல நகருக்கு சுமார் 10 கிலோமீற்றர் தூரம் நடக்க வேண்டியிருந்தது என்று மாணவர்கள் கூறுகின்றனர்.

கெட்டவல நகரத்தைச் சேர்ந்த புலமைப்பரிசில் மாணவர்கள் ஹாலிஎல மற்றும் பதுளை கந்தேகெதர நகரிலுள்ள பரீட்சை நிலையங்களுக்குச் சென்றபோது புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பமாவதற்கு சற்று நேரமே இருந்தது என்றும் பரீட்சார்திகளும் பெற்றோரும் கூறுகின்றனர்.(ஐ)

# நீர் வரத்து அதிகரிப்பு வான் கதவுகள் திறப்பு

கொழும்பு, ஒக். 16

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கென்யோன், விமலசுரேந்திர ஆகிய இரண்டு நீர் தேக்கத்திலிருந்து நேற்று முதல் மூன்று அங்குலம் நீர் வான் கதவுகள் வழியாக திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் தாழ் நிலப் பகுதியில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என நீர் மின் நிலைய அதிகாரியும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபடவும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நீர் தேக்க பகுதிகளில் கன மழையால் மவுசாகல, காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்சபான, பொல்பிட்டி, நவலக்சபான, விமலசுரேந்திர, கலுகல, ஆகிய அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டும் அதன் கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளது.

(ஐ)

# மாத்தறை விபத்தில் தமிழ் பெண் மரணம்!

கொழும்பு, ஒக். 16

வீதியில் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தறை - தெனியாய பகுதியில் தனியார் தேயிலை தோட்டம் ஒன்றில் தொழில் புரிந்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த கந்தசாமி சந்திரா (47) என்ற குடும்ப பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

அம்புலன்ஸ் மூலம் தெனியாய ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில், சாரதியும் முச்சக்கர வண்டியில் பயணித்த ஏனைய இருவரும் காயமடைந்த நிலையில் மாத்தறை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ஐ)

# வறட்சி பாதித்த விவசாயிகளுக்கு அடுத்த மாதம் முதல் இழப்பீடு!

**விவசாய அமைச்சர் அறிவிப்பு**

கொழும்பு, ஒக். 16

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு அடுத்த மாதம் முதல் வழங்கப்படுமென விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் 58 ஆயிரத்து 770 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கை வறட்சி காரணமாக அழிவடைந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 965 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.



பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## இந்திய...

மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 7 தமிழ்க் கட்சிகள் இணைந்து கூட்டாகக் கடிதம் அனுப்புவது தொடர்பில் இன்று (நேற்று) கலந்துரையாடியிருந்தோம்.

இந்திய பிரதமருக்கு அனுப்பவுள்ள கடிதத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. அதனை எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளவுள்ளோம். எதிர்வரும் புதன்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதத்தை 7 கட்சித் தலைவர்களும் ஒப்பமிட்டு அனுப்பவுள்ளோம்." என்றார். (ஐ)

## நாகபட்டினம்...

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளிலேயே இந்த கப்பல் சேவை முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு இயக்கப்பட்டு வந்த பயணிகள் கப்பல் தீவிபத்து காரணமாக நிறுத்தப்பட்டது. நாகை - இலங்கை இடையே மீண்டும் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்படும் என மத்திய அரசு அண் மையில் அறிவித்தது.

இதற்காக மத்திய அரசு ஒதுக்கிய 3 கோடி (இந்திய) ரூபாய் நிதியில் தமிழக அரசு மூலம் நாகை துறைமுகத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக செரியாபானி என்ற கப்பல் கொச்சியில் இருந்து நாகைக்கு கொண்டு வரப்பட்டு கடந்த 8, 9- ஆம் திகதிகளில் சோதனை ஓட்டம் நடைபெற்றது.

பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை இந்திய பிரதம நரேந்திர மோடி சனிக்கிழமை காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்...

உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## இலங்கையில்...

நிலவுகின்றது என்றும் தீர்வு வேண் டும் எனவும் கூக்குரல் இடுகின்றனர். இலங்கையில் எந்தவோர் இடமும் தமிழர்களுக்கு சொந்தம் அல்ல. ஆனால், நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்கள் அனுமதியளித்துள்ளார்கள். இதனை சர்வதேச சமூகம் கவனத்தில்கொண்டு செயல்பட வேண்டும்.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என்று செய்திகள் உலாவுகின்றன. இந்தப் பிரேரணைகள், தீர்மானங்கள் எதற்கு? நாட்டின் இறையாண்மையை மீறிய இப்படியான செயல்பாடுகள்தான் இலங்கையில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் இன மோதலுக்கு வழி வகுக்கும்.

எனவே, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றும் வெளிநாடுகள் பொறுப்புடன் செயல்பட வேண்டும். இங்குள்ள தமிழ் அரசியல் வாதிகளின் சொல்லைக் கேட்டு வெளிநாடுகளும், சர்வதேச அமைப்புக ளும் செயல்படக்கூடாது." - என்றார். (ஐ)

## 45நாள்களில்...

நாடளாவிய ரீதியில் நடைபெற்றது. இதில், 3 இலட் சத்து 37 ஆயிரத்து 956 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்திய படை...

அறிவீர்கள். இந்த இனவழிப்பில் கொல்லப்பட்ட மக்களை நினைவேந்தல் செய்வதன் முக்கியத்துவத்தையும் நீங்கள் உணர்வீர்கள். இந்த நிலையில், தங்களால் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ள ஒக்ரோபர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளான இதே தினங்களில், 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்த மருத்துவர்கள், தாதியர்கள், உட்பட நோயாளர்கள், பொதுமக்கள் இந்திய அமைதிப் படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பதனை நீங்கள் அறிந்திருக்கக்கூடும்.

அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை வருடாவருடம் நினைவுகூரப்பட்டு வருகிறது. இந்த துயர்மிகுந்த நாட்களில், நினைவேந்தல்களூடாக அடுத்த சந்ததியினருக்கு தமிழின போராட்டத்தின் நியாயங்கள் சென்றடையும் என நாம் நம்புகிறோம். இதனை மடைமாற்றி இந்த நாட்களை இளைஞர்களுக்கான மகிழ்ச்சிகரமான களியாட்ட நாட்களாக மாற்றியமைக்க முயலும் இலங்கை - இந்திய அரசுகள் தங்களை பலிக்கடாவாக்க முயல்கிறார்கள்.

இந்த நினைவேந்தல் நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இசை நிகழ்ச்சிகளில் தாங்கள் தெரிந்தோ, தெரியாமலோ கலந்து கொள்வதானது, அநியாயமாக படு கொலை செய்யப்பட்ட அப்பாவி தமிழ் உறவுகளை அவமதிக்கும் செயல்பாடு என்பதுடன், பேரினவாதத்தால் இன்றும் நடைபெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இன வழிப்புக்கு துணைநிற்கும் செயல்பாடாகவும் அமைந்துவிடும்.

மேற்படி நினைவேந்தல்களூடாக தமிழினம் அடுத்த சந்ததிக்கு கடத்த முயலும் தமிழின விடுதலை வேட்கைக்கும் எதிரான செயல்பாடாகவும் அமையும். தாங்கள் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருப்பவர் என்னும் வகையில், இந்திய படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் நினைவு தினங்களில் தங்களின் இசை நிகழ்ச்சி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது, இன்றும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களால் தவறாகவே பார்க்கப்படும் என்பதனை அன்புரிமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இறந்தவர்களை நினைவேந்தும் உரிமையை சர்வதேச சட்டங்களும் இலங்கை சட்டங்களும் அனுமதித்துள்ள போதும், படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவேந்தல்களுக்கு சட்டவிரோதமாக தடைகளை ஏற்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் தரப்புகள், நினைவேந்தல்களுக்கு சட்டரீதியாக தடைகளை ஏற்படுத்த முடியாதபோது, இந்த நாட்களைத் தெரிவு செய்து களியாட்ட தினங்களாக மாற்றும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய முயற்சிகளை புரிந்துகொள்ள வேண்டும் என்று தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உலகத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் இரசிகர் தளத்தைக் கொண்டிருக்கும் தாங்கள், தமிழ் மக்களின் வலிகளையும், வேதனைகளையும் உணர்ந்துகொண்டு - இழப்புகளுக்கும் தியாகங்களுக்கும் மதிப்பளித்து குறித்த திகதிகளை மாற்றி, பொருத்தமான வேறொரு திகதியில் தங்கள் நிகழ்வை மாற்றியமைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

# சீனா பயணமானார் ஜனாதிபதி பதில் அமைச்சர்களும் நியமனம்!

கொழும்பு, ஒக். 16

சீனாவில் நடைபெறும் "பெல்ட் அன்ட் றோட்" திட்டத்தின் 03ஆவது சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றிரவு சீனா பயணமானார்.

எதிர்வரும் 20ஆம் திகதி வரை அவர் சீனாவில் தங்கியிருந்து பல்வேறு சந்திப்புகளிலும் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள இந்தக் காலப்பகுதியில் அவருக்கு கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இன்று முதல் இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பாதுகாப்பு பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதில் நிதி அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும், வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி சுற்றாடல் பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# நான் தாயகம் திரும்புவதற்கு ஜனாதிபதி உதவ வேண்டும்!

## விடுதலையான சாந்தன் மனு

சென்னை, ஒக். 16

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட 7 பேரில் ஒருவரான சுதந்திரராஜா என்ற சாந்தன் தாம் தாயகம் திரும்பி தனது வயது முதிர்ந்த தாயுடன் வாழ உதவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு இது தொடர்பிலான மனுவை அவர் அனுப்பி வைத்துள்ளதாக "தி இந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

தாம் தற்போது திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கும் அல்லது உரிய ஆவணங்கள் இல்லாத வெளிநாட்டு பிரஜைகள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் சாந்தன் குறித்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

32 வருட சிறைவாசத்தின் போது தனது தாயாரை சந்திக்க முடியாத காரணத்தினால், இலங்கைக்கு திரும்பி தனது தாயை கவனித்துக்கொள்ள அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டை புதுப்பிப்பதற்கான மனுக்கள், உயர்ஸ்தானிகராலயத்தில் நிலுவையில் உள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக் கப்பட்டுள்ள இலங்கை பிரஜைகளான ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என அஞ்சி இலங்கைக்கு திரும்பு வதில்லை என தீர்மானித்துள்ளதாக "தி இந்து" செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருவரும் நிவாரணம் கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்துள்ளதாக அந்த செய்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸார் தாக்கியதில் சந்தேகநபர் மரணம்

கொழும்பு, ஒக். 16

அவிசாவளை, தல்துவ பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கையில் இருந்த கைவிலங்கால் கழுத்தை நெரிக்க முயற்சித்த நிலையில் பொலிஸாரால் தாக்கப்பட்ட அவர் நேற்று உயிரிழந்தார்.

விசாரணைக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட நபர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கைவிலங்கால் நெரித்துள்ளார். பொலிஸார் அதை தடுக்க முயன்று அவரைத் தாக்கினர். இதில் சந்தேக நபர் பலத்த காயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலை யில் சந்தேக நபர் உயிழந்தார். (ஐ)

## சந்தைகளில்...

10 வீத கழிவு அறவிடும் நடைமுறை நடைமுறையில் உள்ளது. விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டு இந்தக் கழிவு அறவிடப்படுகின்றது. இது தொடர்பில் விவசாயிகள் முறைப்பாடு மேற்கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். எனவே, பொதுவான முறைப்பாடாக இதனை ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரிடம் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்தே மேற்படி உத்தரவை அமைச்சர் விடுத்தார்.

இந்த விடயம் குறித்து வடக்கு ஆளுநர் கூறுகையில்,

இத்தகைய முரணான செயல்பாடுகளை பொலிஸாரால் மாத்திரம் தடுத்து நிறுத்த முடியாது. இதற்கு பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். கழிவு நடைமுறை தொடர்பிலான சகல தகவல்களையும் பொலிஸாருக்கு வழங்கினால் குற்றங்களை கட்டுப்படுத்தி சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வது பொலிஸாருக்கு இலகுவாக இருக்கும் - என்றார்.

மேலும், எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைகள் சந்தைகளை குத்தகைக்கு கொடுக்கும்போது இந்த கழிவு நடைமுறையை நடைமுறைப்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையையும் பின்பற்ற வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானமாக எட்டப்பட்டது.

(ஐ-03)

## விவசாயம்

செய்ய மாற்று இட ஒதுக்கீடுகள் வழங்க வேண்டும்", என்று அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறு மாற்று இடங்கள் வழங்குவதன் ஊடாக பண்ணையாளர்கள், விவசாயிகள் என இரு தரப்பினருடைய பிரச்னைகளும் முடிவுக்கு வரும். மேலும், பண்ணையாளர்களின் பிரச்னைகள் முடிவுக்கு வரும் வரை கால்நடைகளுக்கு உணவுகளை வழங்க தேவையான உதவித் தொகைகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

நேற்றைய கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் செயலாளர், ஆளுங்கட்சி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், மகாவலி அதிகார சபையினர், பொலிஸ்மா அதிபர் மற்றும் வன விலங்கு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மயிலத்தமடு குடியேற்றவாசிகள் சில நாட்களில் அகற்றப்படுவார்கள்!

## ஜனாதிபதி உறுதி தந்தார் என்கிறார் சாணக்கியன்

கொழும்பு, 16

**மயிலத்தமடு குடியேற்றவாசிகளை ஒரு சில நாட்களில் அகற்ற நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார் என்று மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

மேய்ச்சல்தரை அபகரிப்பு தொடர்பில் நேற்று ஜனாதிபதி பணிமனையில் சந்திப்பு நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே சாணக்கியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பண்ணையாளர்கள் பொதுமக்கள் சேர்ந்து மயிலத்தமடு - மாதவணை மேய்ச்சல்தரை அபகரிப்பை நிறுத்துமாறு கோரி 31 நாட்களாக தொடர்ச்சியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்தநிலையில், பல அழுத்தங்களுக்கு பிற்பாடு இன்று (நேற்று) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். இந்த கூட்டத்தில் நாங்கள் பண்ணையாளர்களின் கோரிக்கை - பிரச்னைகள் பற்றி தெரிவித்திருந்தோம். குறிப்பாக மயிலத்தமடுவில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத்தை அகற்றுமாறு கோரினோம்.

இதன்போது, பொலிஸார் திடீரென சென்று அகற்ற முடியாது என்று கூறினர்.

அவர்களை அகற்ற வேண்டுமென்றால் பொலிஸார் பொது சொத்து அபகரிப்பு சட்டத்தின் கீழ் நீதிமன்ற உத்தரவின் ஊடாக அகற்றுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸாருக்கு கூறினார்.

ஆனால், இதை செய்வதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும் என நான் கேட்டபோது ஒருசில நாட்களில் செய்து முடிக்கலாம் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

கூட்டத்தில் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாதமையால் சில இடர்பாடுகளை சந்திக்க நேர்ந்தது. எங்களோடு இந்த கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சிங்களம் தெரியாமல் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

குறிப்பாக கூட்டத்தில் முன்வைக்கப்படும் கருத்துகளை சொல்லவும் முடியாமல் தாங்களும் கருத்துகளை கூற முடியாத ஒரு நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டனர் - என்றார். (ஐ)

# தேர்தல்களை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவில்லை

## நீதி அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, ஒக். 16

அரசாங்கம் தேர்தல்களை பிற்போடும் நோக்கிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு தேர்தல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முயல்கின்றது என தெரிவிக்கப்படுவதை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

இந்த சீர்திருத்தங்கள் தேர்தல்களை பிற்போடாது எனக் கூறிய அவர், இந்த சீர்திருத்தங்கள் ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புள்ளவை இல்லை என்றும் கூறினார்.

இது அச்சங்களை கொண்டுள்ள நாடு நாங்கள் சீர்திருத்தங்களை கொண்டுவந்தால் என்ன அவசரம் என கேட்பார்கள் தாமதித்தால் ஏன் சீர்திருத்தங்களை கொண்டுவர தாமதம் என்று கேட்பார்கள்.

அரசாங்கம் சீர்திருத்தங்கள் காரணமாக தேர்தல்களை பிற்போடாது எனவும் குறிப்பிட்டுள்ள அவர் இது குறித்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளப்படும் அவர்களின் ஆலோசனைகள் உள்வாங்கப்படும் - என்றும் தெரிவித்தார். (ஐ)

# மயிலத்தமடு விவகாரம்: மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தை நாடவுள்ளோம்!

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஒக். 16

மயிலத்தமடுவில் பயிர் செய்கையில் ஈடுபடுவோரை அகற்றுவதாக மகாவலி அதிகார சபை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வாக்குறுதி அளித்தது. இதனை நிறைவேற்றக் கோரி மீண்டும் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக சுமந்திரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

மயிலத்தமடு - மாதவணை மேய்ச்சல் தரைக்கு உரிமை கோரி பண்ணையாளர்கள் முன்னெடுக்கும் போராட்டம் நேற்று 31ஆவது நாளாக தொடர்ந்தது. இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் நேற்றைய தினம் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றார்.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

மயிலத்தமடு - மாதவணையில் வேறு மாவட்டங்களில் இருந்து ஆட்களைக் கொண்டுவந்து பயிர் செய்கை முன்னெடுக்கப்பட்டது. இதனை இப்போதும் அரசாங்கம் முன்னெடுக்கிறது. அவர்களை அங்கிருந்து அகற்ற நாங்கள் பல்வேறு முயற்சிகளைச் செய்து வந்திருக்கின்றோம். ஆனால், எதுவும் கைகூடவில்லை.

2020ஆம் ஆண்டு எங்களால் இது சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 2021ஆம் ஆண்டு மகாவலி அதிகார சபை அவர்களை அகற்றுவதாக வாக்குறுதி அளித்தது. இதையடுத்து வழக்கு நிறுத்தப்பட்டது.

ஆனால், அந்த உறுதிமொழி தற்போது காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. ஆகையால் நாங்கள் மீண்டும் நீதிமன்றம் சென்று அவர்கள் கொடுத்த உறுதிமொழியை நடைமுறைப்படுத்துவதற்கான மனுவைத் தாக்கல் செய்யவுள்ளோம்.

இதனிடையே, பல தடவைகள் நாங்கள் ஜனாதிபதியுடன் இது சம்பந்தமாகப் பேசினோம். கடந்த சில வாரங்களுக்கு முன்பாக நான் ஜனாதிபதியுடன் சந்தித்து இது தொடர்பாகக் கதைத்த போது எனக்கு முன்பாகவே தனது செயலாளரை அழைத்து உடனடியாக பொலிஸ் அனுப்பி அங்கிருப்பவர்களை அப்புறப்படுத்துமாறு உத்தரவு கொடுத்தார். ஆனால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதியின் அந்த சொல்லுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டதோ தெரியவில்லை. அல்லது எனக்கு அவ்வாறு சொல்லிவிட்டு நான் அங்கிருந்து சென்றதன் பின்னர் செயலாளரை அழைத்து ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சொன்னாரோ தெரியவில்லை.

இன்று (நேற்று) திரும்பவும் ஒரு கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் எமது பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இக்கூட்டத்தில் இது தொடர்பாகப் பேசுவார். இயன்றளவு அழுத்தத்தைக் கொடுத்து அரசு இயந்திரத்தின் ஊடாக அங்கிருப்பவர்களை அப்புறப்படுத்தி இந்தக் கால்நடைகளை உடனடியாக அங்கு கொண்டு செல்வதற்கான முயற்சியை திரும்பவும் எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

அது கைகூடுமோ தெரியாது ஆனால், அடுத்த வாரமளவில் நீதிமன்றத்தில் மகாவலி அதிகார சபை கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு மனுவை தாக்கல் செய்யவுள்ளோம். தற்போது பண்ணையாளர்களின் கால்நடைகள் இருக்கும் விவசாய காணிகளில் இருந்து அந்தக் கால்நடைகளை அகற்றுமாறு அவர்களுக்கு வற்புறுத்தல் வந்துள்ளது. அந்த விவசாயக் காணிகள் உரித்தானவர்களுக்கு நாங்கள் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம்.

இயன்றளவு நீங்கள் கால்நடை வளர்ப்பாளர்களுடன் ஒத்து இயங்குவதற்கு முயற்சி செய்யுங்கள். இது அவர்களால் உருவாக்கப்பட்ட விடயம் அல்ல. அரசாங்கத்தால் வேண்டுமென்றே செய்யப்படுகின்ற ஒரு நிகழ்ச்சி. வயல் விதைப்பு இருக்கின்றது என்பது தெரியும். ஆனால், இயன்றளவு ஒரு வாரத்துக்காவது இதனை பிற்போட்டு அவர்கள் சரியாக இந்தக் கால்நடைகளை அங்கு கொண்டு செல்லும் வரைக்கும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# தேசிய மீலாதுன் நபி விழா 22ஆம் திகதி மன்னாரில்!

மன்னார், ஒக். 16

39ஆவது தேசிய மீலாதுன் நபி விழா எதிர்வரும் 22ஆம் திகதி மன்னாரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

39ஆவது தேசிய மீலாதுன் நபி விழா முசலி சிலாவத்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதற்கான முன்னேற்பாட்டு கலந்துரையாடல் புத்த சாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரம நாயக்க, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோரின் பங்கேற்புடன் முசலி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புத்தசாசன சமய விவகாரங்கள் அமைச்சின் செயலாளர், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், முசலி பிரதேச செயலாளர், முஸ்லிம் கலாசார திணைக்கள உயர் அதிகாரிகள், முப்படை பிரதானிகள், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுப் பிரதானிகள், பொறுப்பு வாய்ந்த திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# பாதிக்கப்பட்ட யாழ். விவசாயிகளுக்கு கொடுப்பனவு வழங்கல் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 16

விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த ஆண்டில் வறட்சியாலும் பொருளாதார வீழ்ச்சியாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நேற்று கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில், விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கலந்துகொண்டு 40 விவசாயிகளுக்கான கொடுப்பனவுகளை முதற்கட்டமாக வழங்கினார்.

அந்த வகையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தலா 2000 ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை கொடுப்பனவாக வழங்கப்பட்டன. அத்தோடு, புதிதாக விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக மேலும் 5 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டனர். (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாகிஸ்தானை இலவாக வீழ்த்தியது இந்தியா!



அகமதாபாத், ஒக். 16

உலகக் கிண்ணத் தொடரின் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திஷய அணி இலகு வெற்றி பெற்றது.

அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தேர்வு செய் தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 42.5 ஓவர்களில் 191 ஓட்டங்களுடன் சுருண்டது. 192 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை துரத்தும் முனைப்புடன் இந்திய அணிக்கு தொடக்கம் கொடுத்தனர் ரோஹித், ஷுப்மன் கில் இணை.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு குணமடைந்து மீண்டும் அணிக்கு திரும்பிய ஷுப்மன் கில் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. ஷஹீன் அப்ரிடி வீசிய 3ஆவது ஓவரில் 16 ஓட்டங்களுடன் விக்கெட் . தொடர்ந்து களமிறங்கிய விராட் கோலி நிலைப்பார் என நினைத்த ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவரும் 16 ஓட்டங்களுடன் கிளம்பினார். 10 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்களை இழந்த இந்திய அணி 79 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ரோஹித் சர்மாவுடன் ஸ்ரேயாஸ் ஐயர் கைகோக்க ஆட்டம் சூடுபிடித்தது. இருவரும் இணைந்து பாகிஸ்தானின் பந்துவீச்சை பறக்க விட்டனர். அதிரடி காட்டிய இந்த இணையை பிரிக்க முடியாமல் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் திணறினர்.

சதத்தை நோக்கி அதிரடி காட்டிய ரோஹித், ஷஹீன் அப்ரிடி மெதுவாக வீசிய பந்தைத் தூக்கி அடித்தபோது அது இஃப்திகார் அகமது கைக்குள் அடைக்கலமானது. 6 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகள் என 63 பந்துகளில் 86 ஓட்டங்களுடன் வெளியேறினார் ரோஹித். 22 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்த இந்திய அணி 158 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

கே. எல். ராகுல், ஸ்ரேயாஸ் ஐயர் கைகோத்தனர். விக்கெட் விழாமல் பார்த்துகொண்ட இணை பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இறுதியில் 30ஆவது ஓவர் 3ஆவது பந்தில் ஸ்ரேயாஸ் பௌண்ட்ரி அடித்து தனது அரைச்சதத்தை எட்ட வெற்றி இலக்கும் எட்டப்பட்டது. ஸ்ரேயாஸ் ஐயர் 53 ஓட்டங்களுடனும், கே. எல். ராகுல் 19 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். பாகிஸ்தான் அணி தரப்பில், ஷஹீன் அப்ரிடி 2 விக்கெட்களையும், ஹஸன் அலி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை வரலாற்றில் 8ஆவது முறையாக பாகிஸ்தானை வீழ்த்தியிருக்கிறது இந்தியா. இந்த வெற்றி வரலாறு தொடர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக ஆடிய பாகிஸ்தானுக்கு அப்துல்லா ஷபிக், இமாம்-உல்-ஹக் தொடக்கம் கொடுத்தனர். பொறுமையாக ஆட்டத்தை தொடங்கியவர்கள், 7ஆவது ஓவரில் ஆளுக்கு 18 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 37 ஆக இருந்தது. 8ஆவது ஓவரில் இந்த இணைப்பாட்டம் உடைக்கப்பட்டது. முஹமது சிராஜ் வீசிய பந்தில் முஹமது ஷபிக் எல். பி. டபிள்யூ. முறையில் 20 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து களத்துக்கு வந்தார் அணித் தலைவர் பாபர் அஸாம்.

10 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்த பாகிஸ்தான் 49 ஓட்டங்களை சேர்ந்திருந்தது. இந்த ஆண்டில் பாகிஸ்தான் விளையாடிய 18 ஒருநாள் போட்டிகளில் பவர் ப்ளேயில் அந்த அணி சார்பில் யாரும் சிக்ஸர்கள் விளாசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 6 பௌண்ட்ரிகளை விளாசி 36 ஓட்டங்களுடன் களமாடிக்கொண்டிருந்த இமாம்-உல்-ஹக்கின் விக்கெட்டை 13ஆவது ஓவரில் ஹார்திக் பாண்ட்யா கைப்பற்றியது இந்திய ரசிகர்களுக்கு ஆறுதல். அவரைத் தொடர்ந்து பாபர் அஸம் - முகமது ரிஸ்வான் இணைப்பாட்டம் அமைத்து நிதான ஆட்டத்துடன் அணியின் ஸ்கோரை உயர்த்தினர்.

57 பந்துகளில் அரைச்சதம் கடந்த பாபர் அஸாமை 29ஆவது ஓவரில் சிராஜ் போல்ட் ஆக்கினார். அவ்வளவுதான். அடுத்தடுத்து பாகிஸ்தான் தனது வேகத்தை இழக்கத் தொடங்கியது. சவுத் ஷகீல் 6 ஓட்டங்கள், இப்திகார் அகமது 4 என 33ஆஆவது ஓவரில் மட்டும் 2 விக்கெட்களை பறிகொடுத்து பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டது பாகிஸ்தான். ரிஸ்வான் நம்பிக்கையளிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அடுத்த ஓவரிலேயே பும்ரா பந்தில் போல்டானார்.

ஷதாப் கான் 2, முஹம்மது நவாஸ் 4, ஹசன் அலி 12 என அடுத்தடுத்து களமிறங்கிய வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க 41 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்த பாகிஸ்தான் 189 ரன்களைச் சேர்த்திருந்தது. ஹரிஸ் ரவூஃப், ஷஹீன் அப்ரிடி இறுதிக்கட்டத்தில் போராடி வந்த நிலையில், ஹரிஸ் ரவூஃப் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் 191 ஓட்டங்களில் பாகிஸ்தான் சுருண்டது. இந்திய அணி தரப்பில் சிராஜ், பும்ரா, ஹார்திக் பாண்ட்யா, குல்தீப் யாதவ், ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)

# ‘ஜெய்சிறீராம்’ கோஷத்துக்கு இந்திய கட்சிகள் கண்டனம்!



அகமதாபாத், ஒக். 16

இந்தியா - பாகிஸ்தான் போட்டியின்போது இந்திய ரசிகர்கள் சிலர் பாகிஸ்தான் வீரர் முகமது ரிஸ்வானுக்கு எதிராக ‘ஜெய்சிறீராம்’ முழக்கம் எழுப்பியது சர்ச்சையாகியுள்ள நிலையில் எதிர்ப்புகள் வலுத்து வருகிறது.

நடப்பு உலக கிண்ணத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போட்டி நேற்று முன்தினம் அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது.

அந்த அணியின் வீரர் ரிஸ்வான் 49 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவர் மைதானத்திலிருந்து வெளியேறி பெவிலியனுக்கு நடந்து செல்லும்போது இந்திய ரசிகர்கள் சிலர் அவருக்கு எதிராக ‘ஜெய்சிறீராம்’ முழக்கத்தை எழுப்பிய காணொலி சமூக வலைதளங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக, “முகமது ரிஸ்வானுக்கு எதிராக பார்வையாளர்கள் எழுப்பிய முழக்கங்கள் கீழ்த்தரமானது” என தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், திரிணாமுல் காங்கிரஸ் எம். பி. சாகேத் கோகலே தனது ருவிற்றர் பக்கத்தில், “2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியா நடந்த வேண்டும் என பிரதமர் மோடி விரும்புகிறார். ஆனால், பாகிஸ்தான் வீரருக்கு எதிராக ‘ஜெய்சிறீராம்’ என முழக்கமிடும் பார்வையாளர்களை பா. ஜ. க. உருவாக்கிய நிலையில், சர்வதேச போட்டிகளை நடத்தும் அளவுக்கு நாம் தகுதி பெற்றுள்ளோமா என்ற கேள்வி எழுகிறது. நரேந்திர மோடி மைதானத்தில் இப்படியான நிகழ்வு நடைபெறுவதில் ஆச்சரியமில்லை” எனப் பதிவிட்டுள்ளார்.

சமூகவலைத்தள வாசிகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.



# 300 சிக்ஸர்களை அடித்த 3ஆவது வீரரானார் ரோஹித்

அகமதாபாத், ஒக். 16

ஒருநாள் போட்டிகளில் 300 சிக்ஸர்களை விளாசிய மூன்றாவது வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் இந்திய அணியின் கேப்டன் ரோஹித் சர்மா. இந்தப் பட்டியலில் சகீட் அப்ரிடி முதலிடத்தில் உள்ளார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான ஆட்டம் அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்றது. இதில், நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா பந்துவீச்சை தேர்வு செய்தது. இதன்படி முதலில் ஆடிய பாகிஸ்தான் அனைத்து விக்கெட்களையும் இழந்து 191 ஓட்டங்களில் சுருண்டது. 192 என்ற வெற்றி இலக்கை இந்தியா துரத்தியது.

இதில் ஹரிஸ் ரவூப் வீசிய 8வது ஓவரில் ரோஹித் சர்மா சிக்ஸ் அடித்ததன் மூலம் ஒருநாள் போட்டிகளில் 300 சிக்ஸர்கள் அடித்த மூன்றாவது வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இந்தப் பட்டியலில் பாகிஸ்தான் முன்னாள் வீரர் சகீட் அப்ரிடி 351 சிக்சர்களுடன் முதலிடத்தில் உள்ளார். 331 சிக்சர்களுடன் மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெயில் இரண்டாவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், 300 சிக்ஸர்களை விளாசிய முதல் இந்திய வீரர் என்ற பெருமையையும் ரோஹித் பெற்றுள்ளார்.

# வில்லியம்சனுக்கு விரல் முறிவு 3 போட்டிகளில் ஆடமாட்டார்!



சென்னை, ஒக். 16

நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்ஸன் கைவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து உலகக் கோப்பையில் அடுத்த 3 போட்டிகளில் அவர் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டமும் அடக்கம். உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான லீக் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நியூஸிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸன் சிறப்பாக விளையாடி 78 ஓட்டங்கள் குவித்தார். துடுப்பாட்டத்தின்போது ஓட்டம் எடுக்க ஓடிய நிலையில் பங்களாதேஷ் வீரர் எறிந்த பந்து வில்லியம்ஸன் கைவிரலில் வேகமாக பட்டது. இதில் காயமடைந்த அவர், மைதானத்திலிருந்து வெளியேறினார்.

மருத்துவர்கள் நடத்திய எக்ஸ்-றே பரிசோதனையில் கைவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது தெரிய வந்தது.

இதையடுத்து வரும் 18ஆம் திகதி ஆப்கானிஸ்தான், 22இல் இந்தியா, 28இல் தென்னாபிரிக்காவுக்கு எதிரான லீக் ஆட்டங்களில் வில்லியம்ஸன் களமிறங்கமாட்டார் என்று நியூசிலாந்து அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# இஸ்ரேல் மற்றும் காஸாவில் நடக்கும் வன்முறைக்கு யார் பொறுப்பு?

**ரொம் கார்ட்டர்**

அனைத்து ஏகாதிபத்திய நாடுகளின் அரசாங்கங்களும், ஊடகங்களும் காஸாவில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக நடந்து வரும் மக்கள் எழுச்சியைப் பற்றிய பொதுக் கருத்தை விஷமாக்கி, இஸ்ரேலின் தீவிர அதி வலதுசாரி ஆட்சியால் பாலஸ்தீனியர்களை பழிவாங்கும் அழிவை நியாயப்படுத்த ஒரு பாரிய பிரச்சார நடவடிக்கைக்கு அணிதிரட்டப்பட்டுள்ளன.

இஸ்ரேலிய பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகுவின் ஒரு அழைப்பைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடென், “காசாவில் இருந்து ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேலுக்கு எதிராக நடத்திய பயங்கரமான தாக்குதலை” கண்டித்து, “இஸ்ரேலின் பாதுகாப்பிற்கான அவரது ஆதரவு உறுதியானது மற்றும் அசைக்க முடியா தது” என்ற தொனியில் சனிக்கிழமை அறிவித்தார். இஸ்ரேலிய குடிமக்கள் மத்தியில் மரணங்கள் பற்றிய அறிக்கைகளில் தங்கள் “திகில் மற்றும் சீற்றத்தை” வெளிப்படுத் தும் அதே வேளையில், இதைத் தொடர்ந்து அமெரிக்க அரசியல் ஸ்தாபனத்தை உள்ளடக்கிய ஒட்டுமொத்த பட்டியலில் உள்ள நபர்கள், கடந்த வார இறுதியில் தோன்றி “பயங்கரவாதிகளின்” இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு கண்டன அறிக்கைகளை வெளியிட்டனர்.

அனைத்து ஏகாதிபத்திய தலைநகரங்களிலும், இஸ்ரேலின் தேசியக்கொடி பொது நினைவுச்சின்னங்களில் காட்டப்பட்டது. உடனடியாக இந்த நிலைப்பாட்டிலிருந்து ஏதேனும் ஒப்பீடு அல்லது விலகலானது, “யூத எதிர்ப்பு அல்லது பயங்கரவாதத்தை ஆதரிப்பதற்கு ஒப் பானது” என்று முத்திரை குத்தப்பட்டது.



குறிப்பாக காசாவில் இருந்து போர் வெடித்த முதல் மணிநேரங்களில், இஸ்ரேலிய குடிமக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது, அவர்களில் பலர் சந்தேகத்திற்கு இடமின்றி பாலஸ்தீனியர்கள் மீதான அடக்குமுறைக்கு தனிப்பட்ட பொறுப்பை கொண்டிருக்கவில்லை. ஆயினும், இவர்களில் பலரின் தலைவிதியில் சோகத்தின் ஒரு கூறு உள்ளது, அவர்கள் தவறான இடத்தில், தவறான நேரத்தில் தாங்கள் இருப்பதை கண்டுகொண்டனர். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கீழ், காசாவில் வாழ்நாள் முழுவதும் கடினமான அட்டூழியங்களுக்கு முகம்கொடுத்து வந்த போராளிகள், தாங்கள் உயிருடன் காசாவுக்குத் திரும்பப் போவதில்லை என்பதை ஏற்றுக்கொண்டனர். ஆதலால், வதைமுகாமின் புறநகரில் ஒரு நடன நிகழ்ச்சி நடத்திய வர்கள் உட்பட முதலில் தென்பட்ட இஸ்ரேலியர்களை அவர்கள் பழிவாங்கினார்கள்.

ஆனால் இங்கே கேள்வி கேட்கப்பட வேண்டும்: அவர்களின் மரணத்திற்கு யார் இறுதி பொறுப்பு? இந்த அவலங்களுக்கான பொறுப்பை அது சார்ந்த இடத்தில் வைக்க வேண்டும்: முதல் இடத்தில், குற்றவியல் இஸ்ரேலிய ஆட்சி மற்றும் அதன் அமெரிக்க ஆதரவாளர்களும், அதேபோல் பாலஸ்தீனியர்களை வெளியேற்றுவதன் மூலம் ஒரு பிரத்யேக யூத அரசை நிறுவும் முழு பிற்போக்குத்தனமான சியோனிச திட்டத்திற்கும் மற்றும் தொடர்ந்து குறுகிய திறந்தவெளி சிறைச்சாலைகள் மற்றும் கெட்டோக்களில் அவர்களை அடைத்து வைத்திருப்பவர்களில் அடங்கியிருக்கிறது.

ஏகாதிபத்திய சக்திகளின் “பயங்கரவாதம்” மற்றும் எழுச்சியின் “வன்முறை” ஆகியவற்றின் ஒருமித்த கண்டனங்கள் மிகவும் உச்சகட்டத்தில் பாசாங்குத்தனமானவை. பாலஸ்தீனியர்கள் மீதான வன்முறை மற்றும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக ஒப்பிடக்கூடிய அளவு “திகில்” மற்றும் “கோபத்தின்” உத்தியோக பூர்வ வெளிப்பாடு இதுவரை எதுவும் இல்லை.

பைடெனின் உரையாசிரியர்கள் சனிக்கிழமை “இந்த வன்முறையால் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்காகவும்” அவரது “பிரார்த்தனைகளை” வழங்கினாலும், ஒரு போர்க் குற்றவாளியான பைடென் வன்முறைகளுக்கு புதியவர் அல்ல. 2003 இல், அவர் ஈராக் மீதான சட்டவிரோத தலையீடு மற்றும் ஆக்கிரமிப்புக்கு செனட்டில் வாக்களித்ததின் விளைவாக, ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் இறப்புகள் ஏற்பட்டன.

நடந்துவரும் நிகழ்வுகளின் தலைகீழான உத்தியோக பூர்வ சித்திரத்தில், பாலஸ்தீனியர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் இஸ்ரேல் அரசு அதற்கு பலியாகிறது என்று கூறப்படுவதற்கு மாறாக, ஏகாதிபத்தியத்தால் பாலஸ்தீனிய மக்களை ஒடுக்குவது முற்றிலும் ஒருதலைப்பட்சமாக இருக்கிறது. இதில் முக்கால் நூற்றாண்டுகளாக இஸ்ரேலிய அரசாங்கம் (ஏகாதிபத்திய சக்திகளால் ஆயுதம் ஏந்தப்பட்டது) அனைத்து எதிர்ப்பையும் மிருகத்தனமாக அடக்கி வைத்துள்ளது. எடுத்துக்காட்டாக 2008-09ல், மூன்று வாரங்களில் காஸா மீதான வான்வழி குண்டுவீச்சில், நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர், பாலஸ்தீனியர்களின் உயிரிழப்புகள் இஸ்ரேலிய உயிரிழப்புகளை விட 100 க்கு 1 என்ற விகிதத்தில் அதிகமாக இருந்தது.

மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனியர்கள் நூற்றுக்கணக்கான தனித்தனி கெட்டோக்களில், நூற்றுக்கணக்கான கூடுதல் இஸ்ரேலிய இராணுவ சோதனைச் சாவடிகளால் சூழப்பட்டு வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதே நேரத்தில், காசா ஒரு பெரிய திறந்தவெளி சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. காசா பகுதி, ஒரு சில மைல்கள் அகலமும் 25 மைல் நீளமும் கொண்டது. ஒவ்வொரு தேவைக்கும் இஸ்ரேலிய அரசாங்கத்தின் தயவில், 2 மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் இந்த திறந்தவெளி சிறையில், பூமியில் மிகவும் அடர்த்தியான மற்றும் அவநம்பிக்கையான சூழ்நிலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சூழலில், காஸாவில் கடந்த வார இறுதியில் வெடித்த எழுச்சியானது ஒரு “தாக்குதலை” விட சிறை உடைப்பைப் போன்றது மற்றும் ஒரு நீண்ட கதையின் சமீபத்திய அத்தியாயம் மட்டுமே ஆகும்.

ஏகாதிபத்திய தலைநகரங்களில், “வன்முறை மற்றும் பயங்கரவாதத்தின்” மீதான பாசாங்குத்தனமான கண்டனங்கள் எதிரொலிக்கும் நிலையில், காஸாவின் மக்களை பயமுறுத்துவதற்கான பதிலடித் தாக்குதல் ஏற்கனவே கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்பு மந்திரி யோவ் கலாண்ட் தனது ஆட்சியின் தன்மையையும் அதன் அடிப்படையான சித்தாந்தத்தையும் முழுமையாக அம்பலப்படுத்தும் மொழியைப் பயன்படுத்தி “காசா மீது ஒரு முழுமையான முற்றுகையை” அறிவித்துள்ளார். “மின்சாரம் இருக்காது, உணவு இல்லை, தண்ணீர் இல்லை, எரிபொருள் இருக்காது, அனைத்தும் மூடப்படும், நாங்கள் மனித விலங்குகளுடன் போராடுகிறோம், அதன்படி செயல்படுகிறோம்” என்று கலாண்ட் குறிப்பிட்டார்.

ஐ.நா.வுக்கான முன்னாள் அமெரிக்க தூதரும், குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான நிக்கி ஹேலி, இந்த எழுச்சி “இஸ்ரேலின் மீதான தாக்குதல் மட்டுமல்ல, அமெரிக்கா மீதான தாக்குதல்” என்று அறிவித்தார், நெதன்யாகு இவற்றை ஒழிக்க வேண்டும் என்று நேரடியாகக் கோரினார். “அடுத்த சில நாட்களில் எதிரிகளுக்கு நாம் என்ன செய்வோம் என்பது தலைமுறை தலைமுறையாக எதிரொலிக்கும்” என்று நெதன்யாகு தனது பங்கிற்கு அச்சுறுத்தலாக அறிவித்தார்.

காஸாவிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ, ஒடுக்கப்பட்டவர்களின் எந்த எதிர்ப்பிற்கும் ஒடுக்குமுறையாளர்களின் அடிப்படை வர்க்க அணுகுமுறையே இந்த மூர்க்கமான ஏகாதிபத்திய பாசாங்குத்தனத்தின் பின்னணியில் உள்ளது. “அடக்குமுறையாளர்களான நாம், அது நமது நலன்களுக்குச் சேவை செய்யும் என்று முடிவு செய்யும் போதெல்லாம் பலத்தை பயன்படுத்த சுதந்திரமாக இருக்கிறோம். கண்மூடித்தனமாக வெடிகுண்டு வைக்கலாம், முற்றுகையிட்டு பட்டினி போடலாம், கொள்ளையடித்து சிறையில் அடைக்கலாம், கழுத்தை காலால் நெரிக்கலாம் ஆனால், படை என்பது நமது ஏகபோகம் மற்றும் நமது தனிச் சிறப்பு, ஒடுக்கப்பட்ட நீங்கள், எந்த சூழ்நிலையிலும் பதிலுக்கு பலத்தை பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டீர்கள்”. ஆக்கிரமிப்பிற்கு எதிராக ஆயுதம் ஏந்துபவர்களை விவரிக்க “பயங்கரவாதி” என்ற வார்த்தையை மீண்டும் மீண்டும் பயன்படுத்த தூண்டுவது இந்த வர்க்க மனப்பான்மையே ஆகும்.

இதில் உள்ள பாசாங்குத்தனத்தின் அளவை எடுத்துக்காட்டும் வகையில், கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த “எதிரியின் எல்லைகளுக்கு பின்னால்” என்ற கட்டுரையில், உக்ரேனியர்கள் ரஷ்யர்களிடம் நீங்கள் ஒருபோதும் பாதுகாப்பாக இல்லை என்று கூறுகின்றனர் என்று நிருபர் ஆண்ட்ரூ கிராமர், ரஷ்ய எல்லைகளுக்குப் பின்னால் கார் குண்டுகள் மூலம் படுகொலைகளை நடத்தும் உக்ரேனிய பயங்கரவாதப் படைகளின் வேலையைக் கொண்டாடினார். “அவர்கள் வெடிபொருட்களை வைப்பதற்காக சந்துகளில் பதுங்கியிருக்கிறார்கள். அவர்கள் உக்ரேனிய பீரங்கிகள் மற்றும் அமெரிக்காவின் நீண்ட தூர ராக்கெட்டுகளுக்கான ரஷ்ய இலக்குகளை அடையாளம் காண்கின்றனர். அவர்கள் இரயில் பாதைகளை தகர்த்து, ரஷ்யர்களுடன் ஒத்துழைப்பதாக அவர்கள் கருதும் அதிகாரிகளை படு கொலை செய்கிறார்கள்” என்று அவர் குறிப்பிட்டார். இத்தகைய வழிமுறைகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பினாமிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன, ஆனால் அந்த பினாமிகளை எதிர்ப்பவர்களுக்கு அனுமதிக்கப்பட வில்லை.

“தந்திரத்தாலும், வன்முறையாலும் ஒரு அடிமையை சங்கிலியால் பிணைக்கும் அடிமை உரிமையாளரும், தந்திரத்தினாலோ அல்லது வன்முறையினாலோ சங்கிலிகளை உடைத்தெறியும் ஒரு அடிமையும், அறநெறி நீதிமன்றத்தில் சமமானவர்கள் என்று இழிவான அயோக்கியர்கள் எமக்கு சொல்ல வேண்டாம்!” என்று லியோன் ட்ரொட்ஸ்கி, 1938ல் எழுதினார்.

அமெரிக்க உள்நாட்டுப் போருக்கு மத்தியில் தனது இரண்டாவது தொடக்க உரையில், நாடு துன்புறுத்தப்பட்ட மிகப்பெரிய வன்முறை, அடிமைத்தனத்தை நிறுவுவதற்கான தவிர்க்க முடியாத வரலாற்றுக் கணக்கீடு என்று தனது கருத்தை வெளிப்படுத்திய ஆப்ரகாம் லிங்கன், “கசையடியால் எடுக்கப்பட்ட ஒவ்வொரு துளி இரத்தமும் வாள் எடுத்த மற்றொருவரால் செலுத்தப்படும்” என்று குறிப்பிட்டார்.

அதே நேரத்தில், காசாவிலுள்ள மக்களுக்கு எதிராக இப்போது இஸ்ரேலிய அரசாங்கம் கட்டவிழ்த்துவரும் அடக்குமுறை, கென்யாவில் மௌ மாவ் கிளர்ச்சிக்கு எதிராக பிரிட்டனும், அல்ஜீரிய சுதந்திரப் போரில் பிரான்சும், நிறவெறி ஆட்சிக்கு எதிராகப் போராடிய தென்னாப்பிரிக்கர்களுக்கு எதிராகப் பயன்படுத்திய அடக்குமுறையிலிருந்து அடிப்படையில் வேறுபட்டதல்ல. அல்லது ஈராக் மீதான அதன் ஆக்கிரமிப்புக்கு எதிரான மக்கள் எதிர்ப்பிற்கு எதிராக அமெரிக்க இராணுவத்தால் எப்பொழுதும் போல், ஒடுக்குமுறையாளர்களிடையே உள்ள அரசியல் உயரடுக்குகள் ஆயுதமேந்திய எதிர்ப்பை பயங்கரவாதம் என்று கண்டித்து, இரக்கமற்ற பழிவாங்கலை ஆயிரம் மடங்கு அழிவுகரமானதாகச் செய்கிறார்கள்.

தற்போதைய பிரச்சார வெள்ளத்தில் இருந்து ஒரு அரிய விலகலாக, பாலஸ்தீனிய தேசிய முன்முயற்சியின் தலைவர் முஸ்தபா பர்கௌதி சிஎன்என் இல் ஃபரீத் ஜகாரியாவினால் நேர்காணல் செய்யப்பட்டார், அதில் பாலஸ்தீனியர்களின் வேறு எந்த விதமான எதிர்ப்பையும் இஸ்ரேல் அரசாங்கம் அங்கீகரிக்க மறுத்ததன் தவிர்க்க முடியாத விளைவே ஆயுதமேந்திய எதிர்ப்பு என்பதை அவர் சுட்டிக்காட்ட அனுமதிக்கப்பட்டார். “நாம் ராணுவ வடிவில் போராடினால், நாங்கள் பயங்கரவாதிகள். நாம் அகிம்சை வழியில் போராடினால், நாம் வன்முறையாளர்கள், நாம் வார்த்தைகளால் கூட எதிர்த்தால், நாம் ஆத்திரமூட்டுபவர்கள் என்று வர்ணிக்கப்படுகிறோம்” என்று குறிப்பிட்டார்.

உண்மையில் 2018-19 இல், 1948-1949 மற்றும் 1967 போர்களின் போது விரட்டியடிக்கப்பட்ட பாலஸ்தீனியர்கள் தமது வீடுகளுக்குத் திரும்புவதற்கான உரிமையைக் கோரி, “வீடு திரும்புவதற்கான பெரும் அணிவகுப்பு” என்ற பதாகையின் கீழ் காசாவில் பாரிய போராட்டங்கள் நடைபெற்றன. இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்களை சுட்டுக் கொன்றதன் மூலம் இந்தப் போராட்டங்களுக்கு பதிலளித்தது. அவர்கள் காசா பகுதியில் அவர்களைச் சுற்றியுள்ள சுவர்கள் மற்றும் வேலிகளை நெருங்கினர். இந்த சம்பவத்தில், குறைந்தது 223 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர், 9,200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர், இன்று பாலஸ்தீனியர்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கும் நபர்கள் எவரும் இந்த தாக்குதலுக்கு கண்ணிமைக்கவில்லை.

(15ம் பக்கம் பார்க்க)

# ஹர்த்தால் பயனற்றது! சர்வதேச நீதியை நோக்கிச் செய்ய வேண்டியது என்ன?

**அ.நிக்ஸன்**

ஹர்த்தால் நடவடிக்கை வடக்குக் கிழக்கில் சாதாரண மக்களையே பாதிக்கும். இலங்கை அரசாங்கத்துக்கு எந்தப் பாதிப்பும் இருக்காது. வெறுமனே எதிர்ப்பை மாத்திரமே ஹர்த்தால் வெளிப்படுத்தும்.

2009 மே மாதத்தின் பின்னரான கடந்த பதின்நான்கு வருடங்களிலும் செய்ய வேண்டிய தேசியக் கடமை ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பதையும் பலவீனங்களையுமே இந்தக் ஹர்த்தால் அறிவிப்பு வெளிப்படுத்தியிருக்கிறது.

ஆகவே சர்வதேச நீதியை நோக்கிச் செய்ய வேண்டியது என்ன?

1) இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் தமிழர்கள் எவ்வாறு ஒதுக்கப்படுகின்றனர் என்பது பற்றிய ஆவணம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். குறிப்பாக 1948 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பில் இருந்து தற்போது நடைமுறையில் உள்ள 1978 ஆம் ஆண்டு குடியரசின் இரண்டாவது யாப்பு வரையும் எப்படிப் புறக்கணிக்கப்பட்டு வருகிறோம் என்பது பற்றிய சட்டங்களை மேற்கோள்காண்பித்து ஆவணம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

2) நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழர்களுக்கு எதிராக குறிப்பாகப் படுகொலைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டமை மற்றும் கொலை ஆதாரங்கள் இருந்தும் குற்றவாளிகள் பிணையில் விடுதலை செய்யப்படுகின்றமை. அதுவும் இராணுவத்துடன் சேரந்து இயங்கிய இராணுவக் குழுக்களில் இயங்கிய பலர் தற்போது அமைச்சர்களாகப் பதவி வகிக்கின்றமை போன்ற விபரங்கள் ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட வேண்டும்.

3) கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையாள பொதுப் பொறிமுறை ஒன்றை வகுக்க வேண்டும். அந்தப் பொறிமுறையைக் கையாள உள்ளூார் மற்றும் உலக அரசியல் பொருளாதார நிலைமைகளை அவதானித்து அதற்கு ஏற்ப செயற்படக்கூடிய துறைசார்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

4) அரசியல் தீர்வு எது என்பதைத் தீர்மானித்து அனைத்துக் கட்சிகளும் ஒரு குறிப்பிட்ட ஆவணத்தில் கையொப்பமிட்டு அதனையே தேசியக் கோரிக்கையாகவும் பொது நிலைப்பாடாகவும் பிரகடனப்படுத்த வேண்டும்.

> தேர்தலில் வெற்றி பெற்று தத்தமது ஆசனங்களையும் தமது கட்சிகளுக்குரிய ஆசனங்களையும் அதிகரிப்பதுதான் முதன்மை நோக்கம் என்றால் அது உப்புச் சப்பில்லாத ஹர்த்தால்களை மாத்திரமே நடத்த வசதியாக இருக்கும்.

5) கொழும்புக்கு வருகின்ற வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திப்பதற்கு அனைத்துக் கட்சிகள் சார்பிலும் ஒருமித்த குரலில் பேசுவதற்காகக் குறிப்பிட்ட சிலர் நியமிக்கப்பட வேண்டும். கட்சிகளாகப் பிரிந்து சென்று சந்தித்தால் அது பிரித்தாளும் தந்திரத்துக்கே வழி சமைக்கும். ஒருமித்த குரல் செயற்பாட்டுக்கும் அது தடையாக அமையும்.

6) வடக்குக் கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் பற்றிய விபரங்கள், 1948 இல் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்கள் குடியேற்றங்கள், 2009 மே மாதத்திற்குப் பின்னர் இலங்கை ஒற்றையாட்சியின் சட்டங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட குடியேற்றங்கள், அமைக்கப்பட்டு வரும் விகாரைகள் பற்றிய விபரங்களை ஆவணப்படுத்த வேண்டும்.




7) அதாவது இலங்கைச் சட்டங்கள் அனைத்தும் பௌத்த சமயத்துக்குரியது, தொல்பொருள் திணைக்களம் பௌத்த சமயத்தை மாத்திரம் மையப்படுத்தியது என்ற வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இது பற்றிய சாட்சியங்கள் வாக்குமூலங்களைப் பெற வேண்டும்.

8) இவை பற்றி வடக்குக் கிழக்கில் மக் கள் அனைவருக்கும் அரசியல் விழிப்பு ணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். குறிப் பாக ஏன் எங்களைப் பிரித்தாள முற்படுகிறார்கள், ஏன் எங்களுக்குள் சாதி. சமய மற்றும் பிரதேசவாத எண்ணங்களைக் கிளறி முரண்பாடுகளை தோற்றிவிக்கிறார்கள் என்பது பற்றிய விளக்கங்களைக் கொடுக்க வேண்டும்.




9) சாதி, மத பிரதேச வேறுபாடுகளுக் கும் அது பற்றிய சின்னச் சின்ன உணர்வு களுக்கும் இடமளிக்காத முறையில் ஒரு தேசமாகத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும் என்பது பற்றிய அறிவுசார்ந்த விழிப்புணர் வுகளை அரசியல் - பொருளாதார நோக் கில் வழங்க வேண்டும்.

10) சிங்கள ஆட்சியாளர்களின் திட்ட மிடப்பட்ட புறக்கணிப்புகளுக்கு மத்தி யிலும் வடக்குக் கிழக்கில் உள்ள வளங்க ளைப் பயன்படுத்தியும் உள்ளூராட்சி சபைகள் மூலமாகவும் குறைந்த பட்ச அபிவிருத்திகளை இயல்பாகவே செய்ய முடியும் என்ற அறிவுசார்ந்த விடயங் களை மக்களுக்குப் போதிக்க வேண்டும். குறிப்பாக உள்ளூர் பொருளாதார உற் பத்தி முறைகள் பற்றி அறிவூட்ட வேண் டும்.

11) கல்வியின் அவசியம் பற்றியும் உலக நடப்புகள் பற்றியும் அறிவூட்ட வேண்டும். அத்துடன் பொழுதுபோக்கு என்று அரசாங்கம் அல்லது சிங்களக் கட்சிகளின் தமிழ் முகவர்கள் அறிமுகப்படுத்துகின்ற களியாட்ட நிகழ்வுகளினால் எழக்கூடிய ஆபத்துகள் பற்றி அறிவூட்ட வேண்டும்.

12) பொதுழுதுபோக்கும் களியாட்ட நிகழ்வுகளும் உலக மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தேவைதான். ஆனால் அது எத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதைத் தமிழர் தேசத்துக்கு ஏற்ற பொதுப் புத்தியாக வகுக்க வேண்டும்.

13) நவீன தொழிநுட்பங்களைக் குறிப்பாகச் சமூகவலைத்தளங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வுகளை ஊட்ட வேண்டும்.

இவற்றைச் செய்ய வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் உண்டு. சிவில் சமூக அமைப்புகள் இதற்கான அழுக்ககக் குழுக்களாக இயங்க வேண்டும்.

ஆனால் தேர்தலில் வெற்றி பெற்று தத்தமது ஆசனங்களையும் தமது கட்சிகளுக்குரிய ஆசனங்களையும் அதிகரிப்பதுதான் முதன்மை நோக்கம் என்றால் மேற்குறித்த பரிந்துரைகள் எதுவுமே செல்லுபடியாகாது.

அது உப்புச் சப்பில்லாத ஹர்த்தால்களை மாத்திரமே நடத்த வசதியாக இருக்கும். (சமகளம்)

# இஸ்ரேல் மற்றும் காஸாவில் நடக்கும்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில், இந்த புதிய இரத்தம் தோய்ந்த வன்முறை வெடிப்பின் முக்கிய தூண்டுதலாகக் கருதப்படும் குற்றவாளியான நெதன்யாகு ஆட்சிக்கு இஸ்ரேலுக்குள்ளேயே தொழிலாள வர்க்கத்தில் ஆழ்ந்த எதிர்ப்பு உள்ளது. இந்த எதிர்ப்பானது, இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஆட்சியின் முயற்சிகள் சவாலுக்குட்படுத்த முடியாத மற்றும் சட்டரீதியாக மறுபரிசீலனை செய்ய முடியாத அதிகாரங்களை வழங்குவதற்கு எதிராக, ஏற்கனவே பாரிய போராட்ட எதிர்ப்புக்கள் மற்றும் ஒரு பொது வேலைநிறுத்தம் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், காசாவில் எழுச்சி எடுத்த வன்முறை வடிவம் இஸ்ரேலுக்குள் ஒரு உண்மையான மற்றும் கொள்கை ரீதியான சோசலிச மற்றும் இடதுசாரி தலைமை இல்லாததுடன் தொடர்பில்லாதது அல்ல. இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்த வெகுஜன எதிர்ப்புக்களின் போது, தங்களைத் தாங்களே அறிவித்துக் கொண்ட தலைவர்கள் சியோனிச அரசின் பாதுகாவலர்களாகவும், அதன் இயற்கையான கூட்டாளிகளாகவும் இருந்த அவர்கள், பாலஸ்தீனிய மக்களின் போராட்டங்களை நோக்கிய எந்தத் திருப்பத்தையும் மிகக் கவனமாகத் தவிர்த்தனர்.

உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை ஏற்குமாறு மக்களை வற்புறுத்துவதற்கு இப்போது நடந்து வரும் பாரிய பிரச்சாரம், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உட்பட உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மில்லியன் மக்கள் அந்தக் கொள்கையை ஏற்க விரும்ப மாட்டார்கள் என்ற அச்சத்தை பிரதிபலிக்கிறது. பாலஸ்தீன எழுச்சிக்கு ஆதரவாக உலகம் முழுவதும் தன்னெழுச்சியான ஆர்ப்பாட்டங்கள் ஏற்கனவே நடந்து வருகின்றன.

இந்த மூலோபாயத்தை செயல்படுத்துவதில் சவால்கள் மற்றும் தடைகள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அமைதியான எதிர்காலத்திற்கான ஒரே பாதை மற்றும் சியோனிச ஆட்சியுடன் கணக்குகளை தீர்ப்பதற்கான ஒரே வழி இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீனிய தொழிலாளர்களின் ஒற்றுமை ஆகும், அவர்கள் ஒன்றாக காசாவிற்கு எதிரான இரத்தக்களரி தாக்குதலை எதிர்க்க வேண்டும். நெதன்யாகுவின் ஆட்சியை வீழ்த்தி, ஒருங்கிணைந்த சோசலிச சமுதாயத்திற்கான போராட்டத்தில் அவர்கள் ஒன்று சேர வேண்டும்.

# 21ஆம் திகதி ஐ. தே. கவின் விசேட மாநாடு கொழும்பில்

கொழும்பு, ஒக். 16

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் பிற்பகல் 2 மணிக்கு இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

கட்சியின் செயல்குழுவால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, தற்போது நிலவும் காலநிலையை கருத்தில் கொண்டு இந்த விசேட மாநாட்டை உள்ளக அரங்கில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலையகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த மாநாட்டில் கட்சியின் யாப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படுமென நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் இளைஞர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, புதிய தீர்மானங்களை நிறைவேற்றி புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் கட்சி கட்டமைப்பில் திருத்தம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாற்றங்களின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் நாட்டின் விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதில் அதிகளவான இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (ஐ)

# நிலத்தின் கீழ் கேட்கும் சத்தம் 50 குடும்பங்கள் பாதுகாப்பிடத்தில்!

கொழும்பு, ஒக். 16

கொத்மலை - வேத்தலாவ எனும் கிராமத்தில் நிலத்தின் கீழ் இருந்து சத்தங்கள் கேட்கின்றன என்று கிராம மக்கள் அளித்துள்ள தகவலுக்கு அமைய நேற்று முதல் அந்தக் கிராமத்தில் வசிக்கும் 50 குடும்பங்களை இரவு நேரத்தில் மட்டும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொடவுக்கு வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைய இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அறிய முடிகின்றது.

இந்த கிராமமானது மலைகள் அற்ற ஒரு சமவெளிப் பகுதியில் அமைந்துள்ளதாக தெரிவித்த நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, அங்கு வழமையாக நிலத்துக்கு கீழ் இருந்து பல்வேறு சத்தங்கள் கேட்பதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும், அதன் அடிப்படையிலேயே இன்று முதல் அவர்களை பாதுகாப்பான இடங்களில் இரவு வேளையில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்நிலைமையானது அச்சப்படுவதற்கான காரணியாக இதுவரை அடையாளம் காணப்படவில்லை. எனினும் நுவரெலியா மாவட்ட கட்டட ஆய்வு மைய அதிகாரிகளின் உதவியோடு குறித்த கிராமம் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுக்க நடவடிக்க எடுக்கப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட மேலும் தெரிவித்தார். (ஐ)

*மலையகம் 200:*

# தேசிய மக்கள் சக்தியின் ஹற்றன் பிரகடனம் வெளியீடு



நுவரெலியா, ஒக். 16

மலையகம் 200 தேசிய மக்கள் சக்தியின் ஹற்றன் பிரகடன வெளியீடு நேற்று ஹற்றன் டி. கே. டிபூயூ மண்டபத்தில் நடைபெற்றது.

ஹற்றன் பிரகடன வெளியீட்டின் போது, கலைசார நிகழ்வுகளும் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

இதேவேளை, பிரகடனத்தின் வெளியீட்டின் முதல் கையெழுத்தை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன், சட்டத்தரணிகள் எனபலரும் கையொப்பம் இட்டனர்.

இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சட்டத்தரணி லால் விஜயநாயக்க, தேசிய

மக்கள் சக்தியின் தேசிய நிறை வேற்றுப் பேரவை உறுப்பினர் பேராசிரியர் விஜய குமார்,பேரவையின் உறுப்பினர் சரோஜா போல்ராஜ், நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளர் மஞ்சுல சுரவீர, மற்றும் தோட்டதலைவர்கள் என பெருந்திரலான மக்கள் கலந்து கொண்டனர். (ஐ)

